பக்கங்கள்: பன்னிரண்டு

tered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 05 | செவ்வாய்க்கிழமை | (18-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 151

சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## பிரதி சபாநாயகர் தெரிவு இன்று

# தத்தம் பலத்தை நிரூபிக்க

# ஆளும்-எதிர்க் கட்சிகள் தீவிரம்

(நமது நிருபர்)

**இன்று பாராளுமன்றம் கூடும் போது இடம் பெறவுள்ள பிரதி சபாநாயகர் மற்றும் குழுத் தலைவர் தெரிவுகளில் தனது சிறுபான்மைப் பலத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு எதிரணிக் கட்சிகள் சிலவற்றின் உதவியுடன் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

சபாநாயகர் தெரிவில் எதிர் அணி தோற்றுப் போன நிலையில் பிரதி சபாநாயகர், குழுத் தலைவர் ஆகிய பதவிகளுக்கான தெரிவுகள் இன்று நடைபெறும்போது அரசு தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் சிக்கியுள்ளது.

மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் இன்று கூடவுள்ள பாராளுமன்றக் கூட்டத்தில் ஏற்கனவே நடந்த சபாநாயகர் தெரிவில் எதிர் அணியினருக்கு ஆதரவு கொடுத்த சில கட்சிகள் அரசுக்குஆதரவு கொடுக்கக் கூடிய நிலையிலும், நடுவுநிலை வகிக்கக்கூடிய நிலையிலும் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த வாரம் நுவரேலியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் தங்கியிருந்த சமயம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானைச் சந்தித்துப் பிரதி சபாநாயகர் மற்றும் குழுத் தலைவர் ஆகிய தெரிவுகள் இன்று இடம் பெறும் போது அரசின் வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குமாறு கோரியிருந்தார்.

இதேபோல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடமும் ஆதரவு வழங்கும் கோரிக்கையையும் முன்வைத்திருந்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறுவதற்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தாவும் கொழும்பு விவேகராமைய விகாரைக்குச் சென்று பௌத்த சங்கத்தின் உயர் பீடத்தினைச் சந்தித்து ஜாதிக ஹெலஉறுமயவின் ஆதரவை அரசுக்குப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விட்டிருந்தார்.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகளுக்கு விட்டுக் கொடுத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் துரிதமாக ஆரம்பிப்பதற்கு நோர்வே

(12ஆம் பக்கம் பார்க்க)



சமாதான முயற்சிகளுக்கான மனித உரிமைகள் ஆலோசகர் இயன் மார்ட்டின் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடியபோது...

## புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும்

### பிரதமர் சோனியாவிடம் சந்திரசேகரன் கோருவார்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு இந்தியாவின் புதிய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்க இருப்பதாக, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் தெரிவித்திருக்கின்றார். தமிழகம் சென்றிருந்த மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அங்கு நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். இதன் போது இலங்கைப் பிரச்சினையில் இந்தியா மனிதாபிமான ரீதியில் பங்களிப்பு செய்ய வேண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## அநுரா அனுப்பிய கடிதத்திற்கு விளக்கம் கேட்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஏற்கனவே தான் சபை முதல்வராக நியமிக்கப்பட்ட பின்னர் மைத்திரிபால சிறிசேனவை அப் பதவிக்கு நியமித்தமை பற்றி அநுரா பண்டாரநாயக்க சகல அமைச்சர்களுக்கும், அரச தரப்பு எம்.பிக்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளமை பற்றி விளக்கம் அளிக்க வேண்டும் என ஜனாதிபதி கோரியுள்ளார்.

இதுபற்றி அநுராவினுடைய கடிதத்தில், தான் ஏற்கனவே ஏகமனதாக இப் பதவிக்கு நியமிக்கப் பட்டுவிட்டதாகவும், பின்னர் நான் எனது அமைசு வேலைகளில் தற்போது மும்முரமாக இருக்கிறேன். அதுவரை இப் பதவியை ஏற்க முடியாது என ஜனாதிபதிக்கு அறிவித்ததாகவும் கூறியுள்ளார்.

ஆனால் இம் முடிவினை மீளாய்வு செய்யும்படி ஜனாதிபதி அநுராவிடம் கூறியிருக்கிறார். இப் பதவியை ஏற்பதா, இல்லையா என முடிவு செய்யும் முன்னரே கடந்த மே 11இல் அரச தொலைக்காட்சியில் தோன்றிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சபை முதல்வராக மைத்திரபால சிறிசேன நியமிக்கப்பட்தாக அறிவித்தார். என்னைப் பற்றி ஒரு சொல்லேனும் தெரிவிக்கவில்லை. இதற்குத் தான் கடுமையான எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அநுரா கூறியுள்ளார்.

ஆனால இதுபற்றி பிரதமரிடம் கேட்டபோது சபை முதல்வராக மைத்திரிபால சிறிசேன

(12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் கறுப்புப் பட்டியுடன் சபைக்கு

### இன்றைய தினம் செல்வர்

(கொழும்பு)

பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகரும், பிரதிக் குழுத்தலைவரும் இன்று தெரிவு செய்யப்பட இருக்கின்றனர். இந்த தெரிவுகளின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு செயற்படுவதென்பது குறித்து இன்று காலை கூடி ஆராயவிருக்கிறது. இந்தக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கின்றனர். இதன் போது இறுதி முடிவு எடுக்கப்படுமென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கூறியுள்ளார்.

இதேவேளை, அண்மையில் கந்தப்பொலவில் இடம்பெற்ற சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாளைய தினம் கறுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் அரசியல் பலத்தை தலைவர் பிரபா நிரூபித்து வருகிறார்

### திலீபன் மருத்துவமனை நினைவு விழாவில் தளபதி சூசை உரை

(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் ஆயுத ரீதியாக மட்டுமின்றி அரசியல் ரீதியாகவும் பலம் வாய்ந்தவர்கள் என்ற உண்மையைச் சிங்கள அரசுக்கும் உலகுக்கும் எமது தேசியத் தலைவர் தெளிவாக நிரூபித்திருக்கிறார்.

இவ்வாறு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவிலும் புதிய கட்டடத் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடமராட்சி மண்ணை எதிரிகளிடமிருந்து மீட்பதற்கு எமது மக்களினதும் போராளிகளினதும் தியாகங்கள்தான் காரணமாகும். எதிரியிடமிருந்து இந்த மண் மீட்கப்பட்டதன் பின்னர் இவர்களுக்கான சரியான சிகிச்சைகள் எவையும் சீராக வழங்கப்படவில்லை. இந்நிலையில் தியாக தீபம் மருத்துவ சேவை இந்தப்பகுதி மக்களின் சுகாதார நலனைக் கருத்தில் கொண்டு சீரான வைத்திய சேவையை ஆற்றி வருகிறது. இதனால் இந்த மக்கள் பெரும் பயனைப் பெற்று வருகின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அகாஷி இன்று கிளிநொச்சிக்கு

(கிளிநொச்சி)

ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேரடியாகச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

இது குறித்த தனது ஆவலை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு அறிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட பல முக்கிய பிரமுகர்களைக் கொழும்பில் சந்தித்த யசூசி அகாஷி இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

புதிய அரசுடனான சமாதான முயற்சிகள் குறித்தும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியை பயன்படுத்துவதற்கும் ஏதுவான சூழலை உருவாக்குவது குறித்தும் தலைவர் வே.பிரபாகரனை நேரடியாகச் சந்தித்து பேச்சுக்களை நடாத்தி ஒரு தீர்மானத்தை எட்டுவதற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் சாசனத்தை மாற்றியமைக்க 150 வாக்குகளே போதுமானது

## வாசுதேவ நாணயக்கார

(கண்டி)

அரசியல் சாசனத்தை மாற்றுவதாயின் பாராளுமன்றத்தில் அதற்குஆதரவாக 150 உறுப்பினர்கள் வாக்களித்தாலே போதுமானது. அண்மையில் இடம் பெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய மககள் சுதந்திர முன்னணி இந்த பெரும்பான்மையைப் பெற்றுள்ளதால இதனை மாற்றியமைக்க தகுதி உண்டு.

கண்டி டி. எஸ். சேனநாயக்க நூலக்கேட் போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற அரசியல் சாச்னம் மறு சீரமைப்பு என்ற தெனிப்பொருளில் உரையாற்றிய புதிய இடசாரி முன்னணியின் தலைவரான வாசுதேவா நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாசுதேவநாணயக்கார தொடர்ந்தும் கூறியதாவது,

1977 ஆம் ஆண்டு ஆட் சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசியல் யாப்பு மாற்றத்தைக் கொண்டு வந்தார்.

தேர்தல் தொகுதி அடிப்படையில் பலவற்றில் வெற்றியீட்டி ஐக்கியதேசியக்கட்சியை போன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முனணியும் அண்மைய தேர்தலில் சகல தொகுதிகளிலும் வெற்றியீட்டியதை ஒப்பு நோக்கலாம். எனவே மூன்றிலஇரண்டு பெரும்பான்மை அதிகாரம் கிடைத்துள்ள இவ்வேளையில் 150 உறுப்பினா்களோடு புதிய அரசியல் சாசனத் தைக்கொண்டுவர இயலும்.

ஆனால் ஜனநாயகம் இதில் முக்கியமாக பேணிப் பாதுகாக்கப்படுவதுடன் சிறுபான்மையின மககளின் பிரதிநிதித்துவமும் இதில் இடம்பெறவேண்டியது என்பதை மறக்கலாகாது.

பல்லின மக்கள் வாழும் நம் நாட்டில் ஜனநாயகம் பற்றி பேசும்பொழுதும் அங்கு தேர்தல்கள் நீதியாகவும் நியாய மானதாகவும் இடம்பெற வேண்டும்.

ஜனசவா எனப்படும் மக்கள் அவை மூலம் பிரதேச ரீதியாக குழுமிவாழும் மக்களின் உரிமைகள் பேணப்படவும் தமக்கான நிர்வாக பிராந்திய அடிப்படையிலான மக்கள் அவை மூலம் பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வைக்காண இயலும்.

மகாத்மா காந்தி அறிமுகப் படுததிய பஞ்சாயத்தின் மற்றும் கிராம சுயஇராச்சியம் மூலம் இவ்வாறு எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். நாட்டின் இறைமையும் ஐக்கியமும் இதில் தொடர்ந்து பேணப்பட வேண்டும்.

எமது நாட்டைப்பொறுத்த மட்டில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் நலன் கவனத்தில் எடுக்கப்படவேண்டியதன் அவசியம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதை தட்டிக்கழிக்க இயலாது. சிறுபான்மை மக்களின் கருத்து இது தொடர்பாக நன்கு அலசி ஆராயப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (4,10,8)

## கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பரீட்சை

(பொன்னாலை)

கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி நிர்வாகம் நடத்தும் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பததிர உயர் பிரிவு இறுதிப் பரீட்சை, இடைநிலை பரீட்சைகள் இடம் பெறவுள்ளன.

இம் மாதம் 21ஆ ம் திகதி முதல் 31ஆம் திகதி வரை மேற்படிபரீட்சைகள் நடைபெறுமென கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (4,41)

## முன்னோடிப் பரீட்சை

(பொன்னாலை)

யாழ்ப்பாணக் கல்லூரி- ஆரம்பப்பிரிவு தரம்5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை இன்று பி.ப. 1.00 மணிக்கு கல்லூரி மண்ட பத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(4,49)

# ஐ.தே.கட்சியை புனரமைப்பு செய்வதில் சிக்கல்களை எதிர் கொள்கிறார் ரணில்



(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தோல்வியயைத் தழுவிக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியைப் புனரமைப்புச் செய்வதற்கு கட்சித்தலைவர் ரணில விக்கிரமசிங்க பல பிரச்சினைகளையும் எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் புனரமைப்பது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை கட்சியின் செயற் குழுக் கூட்டம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதிகளில் நடைபெற்ற போது மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவின் புதல்வர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சியீில் பல மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்றும், களத்தில் இறங்கி வேலை செய்யாதவர்களுக்குப் பொறுப்பான பதவிகளை வழங்குவதில் அர்த்தமில்லை என்றும், கட்சியின் தலைவர், பிரதித் தலைவர் பதவிகளில் இருப்பவர்கள் தொடர்பில் எமக்கு எவ்வித ஆட்சேபனை இல்லையென்று கூறி கட்சியின் தவிசாளர் உட்பட இதர பதவிகளுக்கு நியமிக்கப் படவிருப்பவர் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸாவின் கருத்தை மறைந்த முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவின் மகன் நவீன திஸநாயக்காவும் ஆதரித்தபோது, முன் னாள் ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சர் ராஜிதசேனநாயக்கவும் கட்சி மீதுள்ள தனது ஆதங்கத்தையும் வெளியிட்டார்.

இந் நிலையில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் செயற் குழுக் கூட்டத்தை நிறுத்தி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து கட்சியின் புனரமைப்பு வேலைகளை ஒத்தி வைத்திருப்பதாகவும் தெரிவிக கப்படுகிறது. (4)

## பேராதனையில் ரயில் விபத்து

(திருநெல்வேலி)

கொழும்பு பேராதனை ரயில் நிலையத்தில் இடம் பெற்ற விபத்து ஒன்றில் மயிலிட்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த விபத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் இரண்டாம் வருட பொறியியல் பீட மாணவனான மரியரத்தினம குணரத்தினம் என்ற நபரே உயிரிழந்தவராவார்.

இவர் தும்பளையில் தற்காலிகமாக வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (4,43)

## பிரதித் தலைவராக குமரகுருபரன் தெரிவு

(கொழும்பு)

மேல் மாகாண மக்கள் முன்னணியின் பிரதித் தலைவராக நல்லையா குமரகுருபரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 14ஆம் திகதி கொழும்பில் உள்ள மேல் மாகாண மக்கள் முன்னணிஅலுவலகத்தில் இடம் பெற்ற கட்சியின் அரசியல குழுக் கூட்டத்திலேயே இத் தெரிவு இடம் பெற்றுள்ளது.

கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தலைமையில் இடம் பெற்ற இக் கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட இவர், தனது பதவியை உத்தியோகபூர்வமாக அன்றே ஏற்றுக் கொண்டார்.

இதேவேளை, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் செயலாளராக இருந்த குமரகுருபரன் அண்மையில் மேல்மாகாண மககள் முன்னணியில் இணைநது கொண்டமை தெரிந்ததே. (த-4,63)

## தம்பி, அண்ணனை குத்திக் கொன்றான்

(அம்பாறை)

சகோதரர்களிடையே ஏற்பட்ட தகராறினால் அண்ணன் கத்திக் குத்துக்குப் பலியானான். சந்தேகத்தின் பேரில் பொலிஸார் தம்பியைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் தமன பொலிஸ்பிரிவைச் சேர்ந்த தீகவாபியில் இடம் பெற்றுள்ளது.கத்திக்குத்துக்குப் பலியானவர் அலுத்கமகே சமரவீர(வயது33) எனக் கூறப்படுகின்றது. சொத்துக்களைப் பிரிப்பதில் ஏற்பட்ட போட்டி காரணமாக அண்ணன் தம்பிகளுக்கிடையில் முரண்பாடுகள் நிலவி வந்ததாகவும் இறுதியில் கத்திக் குத்தில் முடிவடைந்ததாகவும் கூறப்படுகின்றது. (த-10)

## பரிசளிப்பு விழாவும ஸ்தாபகர் நினைவுநாளும்

(பொன்னாலை)

மூளாய் சைவப்பிரகாச விததியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் நினைவு நாளும் இன்று செவ்வாயக்கிழமை பி.ப.2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி ர. சோதிலிங்கம தலைமையில் நடை பெறும இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை-மக்கள் வங்கி முகாமையாளர் பொ. அச்சு தம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக மூளாய் கிராம சேவை உத்தியோகத்தர் ச. வைத்தியநாதனும கலந்து கொள்ளவுள்ளனர். ஸ்தாபகர் நினைவுப் பேரு ரையை ஓயவு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் நிகழ்த்தவுள்ளாா். (4,49)

## பச்சிலைப்பள்ளியில் வீதிக் குறியீடு

(பளை)

பசசிலைப்பள்ளி பிரதேசத்தினூடாகச் செல்லும் ஏ-9 பாதையில பொதுமக்கள் பாதையைக் கடக்கும் குறியீடுகள் பச்சிலைப் பளளி பிரதேச சபையால் இடப பட்டுள்ளது.

குறிப்பிட்ட வீதியில் உள்ள பாடசாலைகள் வைத்தியசாலை மற்றும் முக்கிய சந்திகளில் பொதுமக்கள் பாதையைக் கடக்கும் இடங்களில் இக் குறியீடுகள் இடப்பட்டுள்ளன. (97)

## இ.செ.சங்க ஆளுநர்சபைக்கு பாலகிருஷ்ணன் தெரிவானார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆளுநர் சபையின் உறுப்பினராக குலசேகரம் பாலகிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆளுநர் சபை உறுப்பினராக இருந்த சிவநாதன் கிஷோர் கடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானதைத் தொடர்ந்து, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாள் யாழ். மாவட்ட உப தலைவராக இருந்த குலசேகரம் பாலகிருஷ்ணன் அவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆளுநர் சபை உறுப்பினராக இம் மாதம் முதல் பாலகிருஷ்ணன் செயற்படுவார்.(த-4,16)

## வேம்படி மாணவி இரண்டாம் இடம்

(பொன்னாலை)

இலங்கை சதுரங்க சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட இளையோருக்கான சுற்றுப் போட்டியில் 18 வயது பிரிவுப் போட்டியில் யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப்பாட சாலையைச் சேர்ந்த செல்வி வித்தியாராணி சிவகுருநாதன் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

இப்போட்டிக்கென பல வயதுப் பிரிவுகளில் பல்வேறு பாடசாலைகளையும் சேர்ந்த 16 மாணவர்கள் போட்டியிட்டனர்.(4,49)

## மாணவர்-சாரதிகள் மோதலினால் பேராதனைப் பல்கலைக் கழக வைத்தியபீடம் மூடப்பட்டுள்ளது

(கண்டி)

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பிரதேச முச்சக்கர வண்டிச் சாரதிகள் சிலருக்கும் இடையில் கடந்த 9ஆம் திகதி முதல் இடம் பெற்றுவரும் மோதல் சம்பவங்கள் காரணமாக பேராதனைப் பல்கலைக் கழக வைத்தியபீடம் கடந்த வெளளிக்கிழமை முதல் மூடப்பட்டுள்ளது.

இம் மோதல் சம்பவங்கள் தொடர்ந்து வருவதாலும், இதில் வைத்திய பீடமாணவர்களும் சம்பநதப்பட்டிருப்பதாகக் கருதப்பட்டிருப்பதாலுமே வைத்திய பீடம் மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உபவேந்தர் கபில குணசேகரா தெரிவித்துள்ளார்.

வைத்திய பீடம் மீண்டும் திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-10)

## தேர்தல் கடமை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன

(பளை)

தேர்தல் கடமையில் ஈடுபட்ட பச்சிலைப் பள்ளி பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்கான தேர்தல் கடமைக் கொடுப்பனவு கள் கடந்த வியாழக்கிழமை வழங்கப் பட்டது. ஆயினும் தேர்தல் கடமை சம்பந்தமான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கான பிரயாணக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

இதற்கான நிதி யாழ். செயலகத்தால் சம்பந்தப்பட்ட அலுவலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டதும் இக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தெிவிக கப்ட்டுள்ளது. (4,9)

## மாதாந்தக் கலந்துரையாடல்

(மருதங்கேணி)

முல்லை மாவட்ட அரச அதிபரின் மாதாந்தக் கலந்துரையாடல் நாளையும் நாளை மறு தினமும் நடைபெறவுள்ளது.

நாளைய தினம் மு.ப. 10.00 மணிக்கு அத்தியாவசிய தேவைகள் நிவாரண வழங்கல் பற்றிய ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டமும். பி.ப.1.30 மணிக்கு சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினமும் 10 மணிக்கு விவசாயக் குழுக் கூட்டமும் பி.ப.1.30 மணிக்கு வீடமைப் புக்கூட்டமும் நடை பெறவுள்ளதாக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (35)

## இன்று ஒரு தகவல்

# மனிதர்கள் பல விதம்

ஒரு நண்பர் விசிட்டிங் கார்ட் தந்திருந்தார். " எங்கள் ஊருக்கு வந்தால் என் வீட்டுக்குக் கட்டாயம் வாருங்கள்" என்றார். அந்த ஊருக்குப் போகக்கூடிய வேளையும் கிடைத்தது! நேரமும் போதுமானதாக இருந்தது. அவரைத்தேடி வீட்டிற்குச் சென்றேன். அனால் அவரது வீட்டு இலக்கம் தெரிய வில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. அப்போது அங்கே தெருவில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் காட்டி " இந்த விலாசத்தில் உள்ள மாணிக்கம் என்பவரை உங்களுக்குத் தெரியுமா? " என்று கேட்டேன். அவர் " தெரியவே தெரியாது " என்று கூறிவிட்டார். சரி! என்று இன்னும் சிறிது தூரம் தேடிக்கொண்டு நடந்தேன். திரும்பி வந்தால் நான் யாரிடம் விலாசம் கேட்டேனோ அவரது வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் மாணிக்கம் வீடு.

மாணிக்கம் வீட்டிற்குச் சென்று "ஏன் சார் பக்கத்து வீட்டில் இருப்பவர் உமது வீட்டைப் பற்றி, உங்களைப் பற்றித் தெரியாத அளவிற்கு வாழ்ந்து கொண்டிருக் கின்றீர்களே!" இது ஒரு வாழ்க்கையா? என்று கேட்டேன். அவர் கூறினார் " ஐயையோ பக்கத்து வீட்டில் இருப்பவர் வேறுயாருமில்லை சார் எனது அண்ணன் தான் அவர்" என்றார் பதட்டத்துடன்.

பாருங்கள் அண்ணன் தம்பிக்குள் எவ்வளவு ஒற்றுமை நிலவுகின்றதென்று இப்படியெல்லாம் கூட மனித வாழ்க்கை இருக்கின்றது. இதைத்தான் ஒரு டாக்டர் ஆராய்ச்சி செய்து மனிதர்களில் எத்தனை வகையினர் இருக்கின்றனர் என்று கூறியிருக்கின்றார். ஏழு வகையினர் இருக்கின்றனராம் மனிதர்களில். அவரது ஆய்வின் படி ஏழு வகையினர்.

அந்த டாக்டர் கூறியுள்ள ஏழு வகையினரும் யாரென்று பார்ப்போம். முதல் வகையினர் பயந்த சுபாவத்தினர்! இவர்கள் எதனைப் பார்த்தாலும் பயப்படுபவர். இருட்டைக்கண்டாலும் கூடப் பயம் வரும். இந்தப் பயத்தினாலேயே அவர்களுக்கு ஏகப்பட்ட மனோ சிக்கல்கள் வருமாம்! இரண்டாவது வகை சஞ்சலப்படுதல். உருப்படியில்லாத விடயத்திற்குக் கூட சலிப்புடன், கவலையாக முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டிருப்பார்கள் இது ஒருவகை. மூன்றாவதாக ஒரு வகையினர் அடடா! கற்பனைக் குதிரையைத் தட்டி விடுவார்கள்! வானத்தில் மிதப்பார்கள். இவர்களது எண்ணங்கள் கற்பனையில்தான் இருக்குமே தவிர நடை முறைக்கு வராது இது ஒருவகை.

நான்காவது வகை தனி உலகத்தினர். யாரிட்டும் ஒட்டக்கூடாது. கூட்டத்தினுள் போகக்கூடாது. தனித்திருக்க வேண்டும் என்ற மனப்பாங்கை வளர்த்திருப்பார்கள். அதுவே அவர்களது தாழ்வு மனப்பான்மைக்கு அடிப்படை. ஐந்தாவது வகை என்னவென்றால் மற்றவர்களுகக்குக் கீழ் கட்டுப்பட்டு வாழவேண்டும் என்பதை மறுப்பார்கள். எப்படியாவது மீறிவிடவேண்டும் கட்டுப்படவேண்டும் என்ற அவசியமில்லை ஆனால் கட்டுப்படவேண்டும் என்ற சூழ்நிலை வரும் போது கட்டுப்பட்டேயாகவேண்டும். அப்போது எப்படியாயினும் கட்டுப் பாட்டை மீறவேண்டும் என்ற மனோபாவத்துடன் இருப்பார்கள். ஆறாவது வகை பற்றே இல்லாதவர்கள். ஆர்வம் இருக்காது . எதிலும் பட்டுக்கொள்ளாமல் இருப்பார்கள். யாரும் எப்படியும் போகட்டும் நமது பிழைப்பைப் பார்ப்போம் என்றிருப்பார்கள். அதிலும் கூட தமது பிழைப்பிலும் அக்கறையில் லாமலும் இருப்பார்கள்.

ஏழாவது வகை நாம் அனைவரும் பின்பற்றக் கூடிய வகை. என்னவென்றால் அந்த வகையைச் சேர்ந்தவர்கள் தனது வாழ்க்கையைத் திட்டமிட்டு மற்றோரது வாழ்க்கைக்கும் உதவ வேண்டும் என நினைப்பார் களாம். மனிதனாய் பிறந் தோர்க்கு இது போதும். இதைநாம் சரியாய் செய்தால் மனிதப்பிறப்பை அடைந்ததற்கான பலன் கிடைத்து விடும்.

இவர் கூறியது போல் இன்னும் அதிக வகையினர் உள்ளனர். உதாரணமாக ஏமாற்றுவதற்கென்று சில வகையினர் உள்ளனர். ஏமாற்றிக்கொண்டேயிருப்பார்கள். ஏமாற்றா விட்டால் அவர்களுக்குத் தூக்கமே வராது.

ஒருவர் வாங்கிச் சென்றார் "இந்த வங்கியில் பணம் போடலாம் என்றிருக்கின்றேன் அதற்கு வட்டி எல்லாம் எப்படி?" என்று விசாரித்தார். ஊழியர் கணக்குக் காட்டினார். குறித்த தொகைபோட்டால் எவ்வளவு வட்டி வரும் என்று கூறிக் கொண்டிருந்தார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு இவர் இறுதியில் கேட்டார் "பணமே போடாமல் வட்டி எடுக்க ஏதாவது முறை இருக்கா பார்த்துக் கூறுங்கள்! " என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# அமெ.கப்பல்களுக்கு எரிபொருள் வழங்குவது குறித்து ஆராயவில்லை

## ஜனாதிபதி செயலகம் மறுப்பு

(கொழும்பு)

அமெரிக்க யுத்தக் கப்பல்களும் விமானங்களும் இலங்கையில் இருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான எந்தவித உடன்படிக்கை பற்றியும், வாஷிங்டனில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கலந்துரையாடவில்லையென ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் அறிக்கையொன்றையும் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, அமெரிக்க யுத்தக் கப்பல்களும் விமானங்களும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளவென இலங்கையில் உள்ள துறைமுகங்களையும் விமானநிலையங்களையும் உபயோகிப்பது தொடர்பான எந்தவித உடன்படிக்கை பற்றியும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வாஷிங்டனில் தங்கியிருந்த வேளை கலந்துரையாடவில்லை.

அத்துடன் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்க அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றிய நிகழ்ச்சி நிரலில் இந்தவிடயம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவுமில்லை என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி-60,10)

# சமாதானப் பேச்சுக்களில் அவசரப்பட வேண்டாம்

## இராஜதந்திரிகள் அரசுக்கு ஆலோசனை

(கொழும்பு)

சரியான தந்திரோபாயங்களுமின்றி, நிகழ்ச்சி நிரலுமின்றி உள்நாட்டு அரசியல் நிர்ப்பந்தங்களிற்காக பேசசுக்களை அவசரமாக நடாத்த எண்ணவேண்டாம் என சிரேஷ்ட இராஜதந்திரிகள் அரசாங்கத்திற்கு எச்சரித்துள்ளனர். சமாதான செயற்பாட்டினை ஆறுதலாக மேற்கொள்ளும்படி பல அரசியல் தலைவர்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, சமாதான செயலகத் தலைவராக ஜயந்த தனபாலவை அரசாங்கம் நியமித்துள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் இவர் தனது பணிகளை பொறுப்பேற்கவிருக்கிறார். தூதுவர் பேர்னாட் குணதிலகவின் இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜயந்த தனபால ஐ.நாவில் செயலாளராக பணியாற்றியவர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மதிப்பு மிக்க ஒருவர். முன்னர் "நியூயோர்க் ரைம்ஸ்" பத்திரிகையினால் ஐ.நா. செயலாளர் நாயகப் பதவிக்கு பொருத்தமானவர் என வர்ணிக்கப்பட்டவர். இவர் ஜனாதிபதி குமாரதுங்கவின் கீழ் நேரடியாகப்பணியாறறுவார். அத்துடன் அரச தரப்புப் பிரதிநிதியாகவும் பேச்சுக்களில் ஈடுபடுவார்.

2002இல் சமாதான செயலகத் தலைவராக இருக்குமாறு ரணில் விக்கிரமசிங்க ஜயந்த தனபாலவை அழைத்திருந்தார். ஆனால் ஐ.நா. சபையில் இராஜதந்திரியாகத் தனது பணியை கோபிஅனானுடன் இணைந்து செயற்பட்டுவந்ததால் தனபால இந்த அழைப்பை நிராகரித்திருந்தார். தற்போது அரச தரப்பு பிரதிநிதிகள் சரத்அமுனுகமவின் தலைமையில் பேச்சுக்களை நடாத்தத் தயாராகயுள்ளனர். நோர்வேத் தரப்பினர் அண்மையில் இரு தரப்பினருடனும் கலந்துரையாடியிருந்த பின் ஜனாதிபதி இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அடிப்படையில் பேசுவதற்கு சம்மதித்துள்ளமை தெரிந்ததே. (ந-6)

## இராசி பலன்

**18.05.2004**

**(வைகாசி 05, செவ்வாய்க்கிழமை)**

**பரணி மாலை 6.51 மணிவரை**

**சதுர்த்தசி முற்பகல்8.58 மணிவரை**

**இராகுகாலம் 2.52-4.22மணிவரை**

**சுபநேரம் 10.22-11.52 மணிவரை**

*அமாவாசை விரதம்*

**மேடம்**
நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், சிந்தனை மிகுதி, எதிர்பாராத நன்மை.

**இடபம்**
காாய அலைச்சல், நண்பர்கள் மனஸதாபம், பணவிரயம், தொழில் மந்த நிலை.

**மிதுனம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் வருமானம், நல்ல செய்தி, குடும்ப சுகம்.

**கடகம்**
வாக்குமேன்மை, அதிகாரம், காரிய சித்தி, குடும்ப நலம்.

**சிங்கம்**
சரீரப் பிரயாசை, புதிய திட்டமிடல், பிதா சிந்தை, முயற்சி கைகூடும்.

**கன்னி**
காரிய தடங்கல், எதிர்பாராத பிரச்சினை உடல் சோர்வு, பிரயாணம்.

**துலாம்**
நண்பர்கள் உதவி, முயற்சி பலிதம், போசன நன்மை, தொழில் விருத்தி.

**விருச்சிகம்**
புதிய முயற்சி, செய்தொழில் நன்மை, பெரியோர் சந்திப்பு, சத்துரு ஜெயம்.

**தனுசு**
சிறுவியாதி, உறவினர் சந்திப்பு, காரிய தாமதம், தாழ்ந்த சுபாவம்.

**மகரம்**
கல்வியில் ஆர்வம், மனப்பதற்றம், முயற்சி தாமதம், மாதா சுகம்.

**கும்பம்**
நல்ல செய்தி, பிரயாண நன்மை, போசன நன்மை, முயற்சி கைகூடும்

**மீனம்**
செல்வாக்கு குறைவு, ரோகநிலை, விவாதம், முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

## சாவகச்சேரியில் மென்கூரை தகடு உற்பத்தித் தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் மென் கூரைத் தகடுகள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று சாவகச்சேரியில் கடந்த சனியன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்ஜினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜீ.ரீ.சற் நிறுவனத்தின் பணியாளர் ஆர்.நல்லையா தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் கியூடெக் நிறுவன அதிகாரிகள் மற்றும், தொழிற்சாலை தொழிநுட்பவியலாளர்களும் பங்கு பற்றியிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அங்கு உரையாற்றும போது, தென்மராட்சியில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் இவ்வேளையில மென்கூரைத் தகடுகள் உற்பத்தித் தொழிற்சாலை சாவகச்சேரியில் ஆரம்பித்து வைக்கப்படுவது மிகவும் பொருத்தமான செயலாகும். இதன்மூலம் தென்மராட்சிப் பிரதேசத்தில் இருக்கும் குடியிருப்பாளர்கள் பெரும் பயன அடைவார்கள். அத்துடன், இங்கு ஒட்டுப் பலகைக் கதவுகள் மற்றும் பலகைகளையும் இங்கு கொண்டு வந்து விநியோகம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யபபட்டுள்ளன.

இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 25இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டமை பாராட்டத்தக்கது எனக் குறிப்பிட்டார். (தி-16)

## ஐ.தே.கவின் முன்னாள் எம்.பி பொலிஸாரிடம் சரண்

(இராஜகிரிய)

ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லியந்த பெரேரா நேற்று முன்தினம் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு விநியோகிப்பதற்காக இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கூரைத்தகடுகள் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸாரால்இவர் தேடப்பட்டு வந்தார்.

தனது தனிப்பட்ட சட்டத்தரணியூடாக பொலிஸில் சரணடைந்த இவரை பொலிஸார் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்தனர். (4,63)

## நிர்வாகிகள் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய நிாவாகிகள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது. அதற்கமைய தலைவராக மு. விக்னேஸ்வரன், செயலாளராக உ. சுரேஸ்கானும், பொருளாளராக மு. முரளிதரனும் நியமிக்கப்பட்டுள்ளனர். (79)

# சூதாடுவது ஒரு மனவியாதியா?

சூதாட்டம் இரண்டு வகைப்படும் ஒன்று நண்பர்களோடு சேர்ந்து கொண்டு மகிழ்ச்சியையும் கிளர்ச்சியையும் பெறுவதற்காக ஈடுபடுவதாகும்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம்,கோளிக்கைக்காக கொஞ்சம் விட்டுப்பிடிப்பது என்கின்ற மனிதனின் அடிமனத்து விபரீத பிணையச் சுபாவம் இதற்குக் காரணம் எனலாம்:

மற்றொன்று சூதாடிஒரு கட்டாயநிலைக்கு ஆளாகி'செய்,ஈடுபடு'என்றுமனம் ஒருவித வெறித்தன்மையைத் துண்டிக் கொண்டே இருக்கும். அத்தகைய வெறிநிலைக்குத்தான் 'பாரதத்தில்'யுதிஷ்டிரர் தள்ளப்படுகிறார்.

தன்னுடைய இழப்புகள்தெரிந்தும் ,சாதகமற்ற சூழ்நிலைகள் இருந்தும் தானும் தன்சுற்றமும் துன்பங்களுக்கு உள்ளாவார்கள் என்று அறிந்திருந்தும் சூதாடுகிறார்.இதற்குக் காரணம் 'சூதாடியின் பகற்கனவு' என்பர்.

இத்தகைய நிலையை கட்டாய அல்லது நிர்ப்பந்தத்சூதாட்டம் என்று அழைக்கிறோம்.அப்படியானால் தர்மருக்கு மனத்தளர்ச்சி உண்டா? என்கிற விவாதத்திற்குப் போகவேண்டாம்.

நிர்ப்பந்த நிலைச் சூதாடிகள் தங்களின்வருமானம் சேமிப்பு ஆகியவற்றை இழப்பதோடு கடனாளியாகி திருடனாகவும் தீயவனாகவும் காட்சியளிப்பார்கள்.இருப்பினும் ஒருநாள்ஜெயிப்பேன் விட்டதையெல்லாம் மீட்பேன் என்கிற'நம்பிக்கைச்சுடர்'அவர் உள்ளே எரிந்துகொண்டே இருக்கிறது இருப்பினும் அவனைமனநோயாளிஎன்று கூறிவிட முடியாது.காரணம் இவர்களிடம் மனப்போராட்டங்களோ கவலையோ பதட்டமோ காணப்படுவதில்லை.

இத்தகைய சூதாடிகளுக்கு பிரத்திஏக்மான சில குணங்கள.ஆளுமைப்பண்புகள் உள்ளன.இவர்களிடம் எதிர்ப்புணர்ச்சி ,சிறுபிள்ளைத்தனம், சட்டதிட்டங்களையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறியும் மனப்போக்கு, பொறுப்பற்றதன்மை, நெறிபிறழ்வு,ஆகியவைகாணப்படுகின்றன. ஆனால் வெளிப்பார்வைக்கு நட்புடையவர்கள்போலவும் அன்பானவர்கள் போலவும்காட்டிக்கொள்வார்கள்.

ஆதாயம் சுய இலாபம் கருதியே பழகும் இவர்கள் கேட்கும் போது பணம்கொடுத்து உதாவதவர்களைக் கைவிட்டுவிடவும் அவர்கள் மீது ஆபாண்டமான பளிகளை சுமத்தவும் அஞ்சமாட்டார்கள்.

தங்களுடைய சூதாட்ட நடவ டிக்கைகளுக்கு சாதகமான காரணங்களைக் கூறுவார் கள் ஒரேநாளில இழந்த வற்றையொல்லாம் மீட்டு இலாட்சாதிபதிஆவேன் என்று உறுதியாகக் கூறுவார்கள் தோற்பதால் படிப்பினை பெறு வார்களா? எனின் 'இல்லை' யென்றேகூறலாம் தோற்பதிலும் ஒருஅலாதியான இன்பத்தைப்பெறுவதால் இவர்களை தனக்குத்தானே துன்பத்தை விளைவித்துக்கொண்டு

**டாக்டர் ஜி.ராஜமோகன்**
**M.B.P.S**

இன்பம்பெறுபவர் (தன்வதைச் சுகம்) என்று உளப்பகுப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

வேறுசிலர் 'மந்திர எண்ணங்களை' வரவழைத்துக்கொண்டு சூதாடுவதற்காக அலுவலகத்தில் கையாடல் பிறரிடமிருந்துகளவாடல் போன்ற தீச்செயல்களைச் செய்வார்கள் இத்தகைய 'மந்திர எண்ணம்' தீவிரமானால் தோல்வி வெற்றியின் முதற்படி என்றும் தன்னால் பகடைக்காய்களையும் குதிரை ஓட்டிகளையும் கட்டுப்படுத்த முடியும் என்கிற பித்துநிலைக்கு தள்ளப்புட்டுவிடுவாார்கள்

சூதாடிகள் குழந்தைப்பருவத்தில் அன்பிற்காக ஏங்கியவர்களாகவும் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் உதவிகளைப் பெறமுடியாதவர்களாகவும் இருந்திருப்பதை இவர்களின்வரலாற்று ஆய்வு மூலம் அறிகிறேம். வளரவளர இவர்கள் மற்றவர்களின் நலம்பற்றிய அக்கறை சிறிதும் இல்லாதவர்களாக மாறிவிடுகின்றனா்.'அதிஷ்டதேவதை' தன்னோடுஇருக்கிறார்.என்கிற அசையாத நம்பிக்கையை கொண்டிருக்கிறார்கள்.

இவர்களைத் திருத்துவது 'அகரப்பிரயத்தனம் 'என்பது உளவியளாலர்கருத்து. மனநோய்பிரிவு அட்டவணையில் சூதாட்டத்தை(DSM 111) அவதியுறும் நோய் என்னும் தலைப்பின் கீழ் குறிப்பிட்டுள்ளனர்.

*நன்றி நல்வழி*

## இரத்தினபுரியில் மண்சரிவு

(இரத்தினபுரி)

இரத்தினபுரியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரத்தினபுரி பஸ் நிலையத்திற்கு அண்மையில் ஏற்பட்ட இம் மணசரிவில் காயமடைந்த இருவரும் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதியில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடடுக் கொண்டிருந்தவர்களே இம மண்சரிவில் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(தி-4)

## மின்இணைப்புக்கள் வழங்கப்பட வில்லை

(பொன்னாலை)

மின் இணைப்புக்களை பெறுவதற்காக விண்ணப்பித்த நெடுந்தீவுப் பகுதி மக்களுக்கு இன்னமும் மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை எனத் தொிய வருகிறது.

விண்ணப்பங்கள் மற்றும் மின் இணைப்பை பெறுவதற்கான பணம் என்பவற்றை மின்சார சபையினரிடம் ஏற்கனவே சமர்பபித்திருக்கிற போதும் இணைப்புக்கள் வழங்கப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தொிவிக்கின்றனர்.

(4,49)

## பொங்கல் விழா

(இணுவில்)

ஏழாலை மத்திஅருள் மிகு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் விழா எதிர்வரும் யூன் மாதம 2ஆம் திகதி நடை பெறவுள்ளது.

விசாகப்பொங்கல் தினத் திற்கு முதல்நாள் அம்பா ளுக்கு விஷேட அபிடேகமும் நடைபெறவுள்ளது.

(122)

## வட-கிழக்கு அமைச்சுக்கள் வளாகம் திருமலையில்

(திருகோணமலை)

பொது மக்களின் வசதி கருதி வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள சகல அமைச்சுக்களின் செயறபாடுகளையும் ஒன்றிணைத்து நடைமுறைப்படுத்துவதற்காக திருகோணமலையில் மாகாண அமைச்சுகளின் வளாகம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கபபட்டுள்ளது.

இது தொடர்பாக வடக்குக் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா கருத்துத் தெரிவிக்கையில்.

வடக்கு- கிழக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் தனியார் கட்டடங்களில் தொடர்ந்து பல காலமாக இயங்கி வருகின்றன. இதனால் இலட்சக்கணக்கான ரூபாக்களை மாகாண சபை வாடகையாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வெவ்வேறாக இயங்கி வரும் அமைச்சுக்களினால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.இதனை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார்.

(தி)

## கே.கே.எஸ் வீதியில் மின் இணைப்புக் கோளாறு

(இணுவில்)

காங்கேசன்துறை வீதியில் இணைக்கப்பட்டுள்ள மின் கம்பிகளில் அடிக்கடி மின்வலு கூடுவதனால் மின் இணைப்புக் கம்பிகள் தொய்ந்து ஒன்றோடொன்று முட்டிமோதி வெடிப்பதனால் மின் சாரத்தடை ஏற்படுகிறது.

இப்படியான நேரங்களில் வீதிவழியே செல்வது அபாயகரமாக இருப்பதாகப் பொது மக்கள் அச்சம் தெரிவிக்கிறாாகள்.

மின்கம்பிகளில் ஏற்படும் தொய்தலைத் தடுப்பதற்கு இடையிடையே பிளாஸ்ரிக் பைப்கள் கட்டப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

(து-122)

## வருடாந்த பொங்கல் விழா

(மருதங்கேணி)

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை பத்திரிகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் குளிர்த்தி எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று பகல் விஷேச அபிசேகங்கள் நடைபெற்று விஷேட பூசை இடம் பெறும்.

(4,35)

## இந்திய இலங்கை மீனவர் இடையே இவ்வாரம் சந்திப்புகள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையே கடற்றொழிலில் இருந்து வரும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் பொருட்டு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் எஸ்.பி அருளானந்தம் தலைமையில் 20பேர் கொண்ட குழு இவ்வாரம் இலங்கை வரவுள்ளது.

இலங்கைவரும் மேற்படி குழு எதிர்வரும் 20 ஆம் திகதி மன்னாருக்குச் சென்ற அங்குள்ள மீனவர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நடத்தவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன்,எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதன்பின்னர் 22 ஆம் திகதியளவில் யாழப்பாணத்திற்கு விஜயம் செய்யும் இக்குழு யாழ்.குடாநாட்டு மீனவர்பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடலை நடத்தவுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரு கலந்துரையாடல் நிகழ்வுகளிலும் வடகடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மின்பிடிப்பதால் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இந்திய மீனவர்கள் கொண்ட குழுவுக்கு மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் விளக்கிக் கூறவுள்ளனர்.

(உ-10)

மீண்டும் உங்கள் வலம்புரியில்

**விவாத அரங்கு**

விடயம்

தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்

பலப்படுகின்றது

பலவீனப்படுகின்றது

உங்கள் கருத்துக்களை
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

**அன்பு வாசகர்களே!**

ஊர்த்தரிசனப் பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகிறது. உங்கள் ஊரில் நிலவும் நிறை குறை களை எழுதி, உங்கள் ஊருக்குப் புத்துயிர் அளியுங்கள். உங்கள் ஆக்கங்களைப் புகைப்படங்களுடன்,

ஊர்த்தரிசனம்
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

**பிரதி வெள்ளி தோறும் வலம்புரியுடன்**

KID'S OF ENGLISH

(ஆங்கில இணைப்பு)
வெளிவரவுள்ளது.
பள்ளிச் சிறுவர்களே!
மற்றும் பருவத்தினரே!
பயனடைய வாங்குங்கள்.

Kid's of English

# யாழ். மாவட்டத்தில் வீழ்ச்சியடைந்துள்ள கல்வித்தரத்தை கட்டியெழுப்ப முன்வரவேண்டும்

## த.பு.க. இணைப்பாளர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து கொண்டு வருவதால் அதனை மீளவும் கட்டியெழுப்பி யாழ்ப்பாணத்தின் கல்விப் பெருமையை கட்டிக்காப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வரல வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டத்திற்கான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளரான எஸ். ஜெயராஜா யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இடைவிலகிய மாணவர்கள் தொடர்பான கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

கல்வித்திணைக்களத்தின் இணைப்பாளரான த. பஞ்சலிங்கம தலைமையில் நடைபெற்ற இக்கூட்டதத்தில் இணைப்பாளர் ஜெயராஜா தொடர்ந்து உரையாற்றும்போது,

எமது மாவட்டத்தில் கல்வி நிலை தொடர்பாக அண்மைக்காலங்களில வெளிவந்துள்ள சில புள்ளிவிபரங்கள் எமக்குப் பல உண்மைகளை உணர்த்திநிற்கின்றன.

எமது பிரதேசத்தில் இரு தசாப்தங்களாக இடம்பெற்று வந்த யுத்தம் காரணமாக எமது மாணவர்களின் கல்வி நிலை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

எமது கல்விநிலை பின்னோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டு செல்கின்றது. இதனையிட்டு நாம் கவலைப்படாமல் இருக்க முடியாது. எனவே, நாம் முன்னெடுக்கும் திட்டங்கள் மூலம் இழந்த கல்வியை மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.எமது சிறுவர்கள் மத்தியில் சிறந்த சிந்தனைகளை ஏற்படுத்த வேண்டும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமூகப்பணிகளை மேற்கொண்டு வருகின்றது.தமது செயற்பாடுகளை மென்மேலும் சிறப்பாகச் செய்யும் பொருட்டு பல புதிய திட்டங்களை அமுல் செய்யவுள்ளோம்.

இதேசமயம் எமது திட்டங்களுககு உதவுவதற்குப் பல வெளிநாட்டு நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன.

எமது மாவட்டத்தில் இருக்கக்கூடிய சில கிராமங்களிலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதில எவ்விதமான அக்கறையுமின்றி இருநது வருகின்றனர்.

எனவே எமது பெற்றோர்களுக்கும் வழிப்புணர்வுப் பிரச்சினைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையே தற்போது காணப்படுகின்றது.

நாம் மீண்டும் மீண்டும் வரலாற்றுத் தவறுகளை இழைக்காது புதிய நோக்கில் எமது அடுத்த சந்ததியின் நல்வாழ்வை மனதில் கொண்டு செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். (4,16)

# வாகனங்களை அடித்து நொருக்குவதால் இழந்த உயிரை மீளப்பெறமுடியாது

## சுரேஸ் எம்.பி. கருத்து

(கோப்பாய்)

கணனிகளுடனும் நவீன தொழில்நுடபத்துடனும் கூடிய கல்வித் துறையில் உலக நாடுகள்வளர்ச்சி அடைந்து வரும் அதேவேளையில் மீண்டும் சரித்திரம், புவியியல, குடியியல் என்ற பாடங்களை பாடவிதானத்துள் புகுத்திப் பழைய வரலாறுகளைத் திரிவுபடுத்திச் செயற்பட இன்றைய அரசு செயற்படுவது கவலைக்குரியது என ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வித்தியாலய அதிபர் வே.பாலசுபபிரமணியம் தலைமையில் நடைபெறற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஏ-9பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்தில் வாகனங்களின எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது மகிழ்ச்சிக்குரியது.

ஆனால் இதற்கேற்ற வகையில் சாலைகள் ஒழுங்கமைக்கப்படவிலலை. எனவே வீதி ஒழுங்குகளை சரிவரக் கடைப்பிடிக்கவேண்டியதும் சமூகத்துக்கு முன்மாதிரியாகச் செயறபட வேண்டியதும் பாடசாலை மாணவர்களது முக்கிய கடமையாகும்.

யாழ்.குடாநாட்டில் வீதி விபத்துககள் தினமும் நடைபெற்று வருகினறது. எனவே இதிலிருந்து விலகிக் கொள்வதும் விலக்கிக் கொள்வதும் மாணவர்களது கடமையே. இதன்மூலம் வீணான உயிரி ழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும. இவ்விபத்துகள் சில வேளைகளில் வாகனங்களைத் தீவைத்தல் ,அடித்து நொருக்குதல் போன்ற அடாவடித்தனங்களை ஏற்படுத்துகின்றன.

இதனால் இழந்த உயிரை மீளப்பெற முடியாது. எனவே வீதிகளில் இருவர், மூவராகச் செல்லாது சட்டத்தை மதித்து வீதி ஒழுங்கை பேணுவதன் மூலம் விபத்துக்களைக் குறைக்க முடியும் என மேலும் தெரிவித்தார். (4,79)



# சகல பல்கலைக்கழகங்களிலும் தாதிமார், துணை மருத்துவர் சேவைகள் கல்வித் திட்டத்தில் சேர்க்கப்படும்

(கொழும்பு)

தாதிமார் சேவை, துணை மருத்துவ சேவை சம்பந்தமான கல்வித் திட்டங்கள் சகல் பல்கலைக்கழகங்களின் பாடவிதானத்தில் சேர்க்கப்படவுளளதாக சுகாதாரப் பாதுகாப்பு மற்றும போசாக்கு அமைச்சர் நிமால சிறீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தாதிமார் சேவை, துணை மருத்துவ சேவை ஆகிய கல்வித்திட்டங்களை பல்கலைக்கழகங்களில் இணைப்பதன் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு விரைவில் குடும்ப சுகாதார அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைய சுகாதார சேவைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியை மேலும் அதிகரிப்பதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (60,10)

# மினிபஸ் உரிமையாளர்கள் போராட்டம் போக்குவரத்துச் சேவைகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மினிபஸ் உரிமையாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுததம் மற்றும் ஆர்ப்பாட்ட போராட்டங்கள் காரணமாக நேற்று யாழ். மாவட்டத்தின் மினிபஸ் போக்குவரத்துச சேவைகள் பெரிதும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும மினபஸ் விபத்துச் சம்பவங்களைத் தொடர்ந்து விபத்திற்கு காரணமாகவிருக்கும் மினிபஸ்களை எரித்து மக்கள செய்யும் ஆர்ப்பாட்டங்களும், அதனால் இடம்பெறும் வன்முறைகளையும் கண்டித்தே யாழ்.மாவட்ட மினிபஸ் உரிமையாளர்களால் இவ் வேலைநிறுத்தமும், ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டுள்ளன.

இதன்போது மினிபஸ் சேவைகள் யாழ்.மாவட்டம் தழுவிய ரீதியில் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் யாழ்.நகரப் பகுதியில் இருந்து யாழ்.அரச செயலகம் நோக்கிய கண்டனப் பேரணி ஒன்றும் நடத்தப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட மினிபஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக் கண்டனப் பேரணியின் முடிவில் விபத்துக்களில் சம்பந்தப்படும் மினிபஸ்கள் மீது மக்களால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் நிறுத்தப்படல் வேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றும் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இப்போராட்டங்கள் காரணமாக மினிபஸ் போக்குவரத்துச் சேவை இடம்பெறாததால் பயணிகள் பெரும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டனர். (4,16)

*பிரி. வெளிவிவகார அமைச்சின்*

# உயர் அதிகாரிகள் குழு யாழ். விஜயம் செய்யவுள்ளது

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின இலங்கைக்கான உயர்மட்ட அதிகாரிகள குழு ஒன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி யாழ். வரும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கான பொறுப்பதிகாரி சைமன் பொண்ட் தலைமையிலான இக்குழுவில் பிரித்தானியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலய பொறுப்பதிகாரிகளான மாக் கிரஸ்டெண்டிபூ ஆகியோரும் அங்கம் வகிப்பர்.

யாழ்.மாவட்டத்தில் நிலவும் அரசியல்,இராணுவ நிலைமைகள தொடர்பாகவும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராய்வதற்காக யாழ்.வரும் இவாகள் இங்கு மனிதபிமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் அரசசார்பற்ற அமைப்புக்கள், அரச உயர் அதிகாரிகள, பொது அமைபுக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடுவார்கள் எனத் தெரியவருகிறது. (4,16)

# அரச கட்சியின் அமைப்பாளர் பதவியிலிருந்து அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே நீக்கம்

(கொழும்பு)

அரசாங்க கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவியில் இருந்து வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே விலக்கப்பட்டுள்ளார்.

அதற்குப் பதிலாக அரசாங்க கட்சியின் பதில் அமைப்பாளர் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்க கட்சியின் பதில் அமைப்பாளர் பதவியை தான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அரச கட்சியின் அமைப்பாளர் பதவியிலிருந்து தன்னை நீக்குவதற்கு மக்கள் விடுதலை முன்னணியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஏற்கனவே முயற்சி செய்ததாகவும் எனவே அவர்களின் தூண்டுதலின் பேரிலேயே தனது இந்தப் பதவி பறிபோனதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனால் தான் அரச கட்சியின் பிரதி அமைப்பாளர் பதவியை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் இதுகுறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (10)

# இனக் கலவரத்தில் உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்குவது நகைப்பிற்குரியது

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

1983ஆம் ஆண்டு இனக்கலவரங்களின் போது உயிரிழந்தோருக்கு இழப்பீடு வழங்கப்போவதாக அரசாங்கம் தெரிவித்திருப்பது நகைப்பிற்குரியதாகவுள்ள தென தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுபபினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்மேலும் கருத்துத்தெரிவிக்கையில்,

தமிழ்,சிங்கள மக்ளுக்கிடையிலான இனப்பிரச்சினை மிகவும் உக்கிரமடைய அடிப்படையாக இருந்த 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் குறித்தும் அதற்கான பின்னணிக் காரணங்கள் குறித்தும் எந்த அரசும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு இருக்கையில் இழப்பீடு வழங்கப்போவ தாகத் தெரி வித்திருக்கின்றமை இலங்கை அரசு மேற்கொள்ளும்ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்றே கூற வேண்டும்.

இது ஒரு புறமிருக்க சிங்கள மக்களை ஏமாற்றி ஆட்சிப்பீடம் ஏறிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தமிழ்மக்களுக்கு அறப சலுகைகளைச செய்து அவர்களின் ஆதரவையும்பெற முயற்சிக்கின்றது.

இவையெல்லாவற்றிற்கும் முற்றுப் புளளிவைக்கும் பொறுப்பு தமிழ் மக்களுக்கே இருக்கின்றது.

அதுமட்டுமன்றி சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கப் போவதாகவும் கூறும் அரசு தமிழ மக்களுக்கு நியாயமான தீர்வு பெற்றுக்கொடுக்கப் போவதாகவும் கூறி வரும் அரசின் நடாகம், சாவதேச நாடுகளிலும் நீதியைப் பெற்றுக கொளளும் வரையுமே மேடை யேறும் என்பதையும் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.(64,8)

*பருத்தித்துறை துறைமுகத்தில்*

# பொதி இறக்குநர்களுக்கு முகக் கவசங்கள் தேவை

## கடற்றொழிலாளர் கோரிக்கை

(திருநெல்வேலி)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொதி இறக்குனர்களுக்கு முகக் கவசங்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


மேற்படி துறைமுகத்திற்கு வரும பொதிகளை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டு வரும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் ஊழியர்களுக்கு இதுவரை முகக் கவச உறைகள் வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக பொதிகளை ஏற்றி இறக்கும் இவர்களுக்கு தூசு துணிக்கைகளின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதால் சுவாச நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தால் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4,43)

# நேரு பரம்பரையில் நான்காவது பிரதமர் சோனியா காந்தியின் வாழ்க்கை வரலாறு

இந்திய உப கண்டத்தின் பிரதமராகப் பதவியேற்கவிருக்கும்



காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி 36 ஆண்டுகளுக்கு முன்னர் ராஜீவ் காந்தியின் துணைவியாக, அவர் கரம் பற்றி நாட்டின் மருமகளாக மறைந்த பிரதமர் இந்திரா காந்தியின் இல்லத்தில் குடிபுகுந்தார்.

அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய செய்தித் தொகுப்பு:

நாட்டின் அடுத்த பிரதமராகப் பதவியேற்க விருக்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி 1946 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9



ஆம் திகதி இத்தாலியில் துரி என்ற இடத்தில் பிறந்தார்.

1965 ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது ராஜீவ் காந்தியை முதன் முறையாகச் சந்தித்தார். முதல் சந்திப்பிலேயே அவர்கள் இருவருக்குமிடையில் காதல் அரும்பியது. பின்னர் 1968 ஆம் ஆண்டு இவர்கள் திருமணம் நடை பெற்றது. திருமணமான பின்னர் இந்தியாவில் குடிபுகுந்தார்.

1980 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தியின் சகோதரர் சஞ்சய்



காந்தி விமான விபத்தில் பலியானதையடுத்து ராஜீவ் காந்தி இந்திய அரசியலில் காலடி வைத்தார்.

1984 ஆம் ஆண்டு டில்லியில் இந்திரா காந்தி கொலையுண்ட பின்னர் ராஜீவ் காந்தி தீவிர அரசியலில் ஈடுபட்டர். நாட்டின் பிரதமராகவும் ராஜீவ் காந்தி பதவி வகித்தார்.

பின் ஸ்ரீபெரும்புதூரில் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ராஜீவ் காந்தி பலியானதையடுத்து துயரில் ஆழந்த சோனியா காந்தி தனது குழந்தைகளுடன் புதுடில்



லியில் வாழ்ந்துவந்தார்.

1998 ஆம் ஆண்டு முதன் முறையாக அரசியல் பிரவேசம் செய்த சோனியா காந்தி அப்போது காங்கிரஸ் கட்சிக்காகத் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

மக்களவைக்கு அப்போது அமேதி, பெல்லாரித் தொகுதிகளிலிருந்து அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1999 ஆம் ஆண்டு பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோல்வியுற்ற நிலையில் அரமைக்கும் வாய்ப்பு சோனியா காந்திக்கு ஏற்பட்டது. ஆனால் சமாஜ்வாதி, போர்வேட் புளக் உள்ளிட்ட சில கட்சிகள் ஆதரவளிக்க மறுத்ததையடுத்து பிரதமராகும் வாய்ப்பு இல்லாமல் போனது.

பின்னர் 1999 இல் அமேதி தொகுதியில் இருந்து மீண்டும் அவர் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

13 ஆவது மக்களவைத் தேர்தலிலும் அமேதியில் வெற்றி பெற்ற சோனியா காந்தி, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி என்றவரிசையில் நேரு குடும்பத்தைச் சேர்ந்த சோனியா காந்தி 14 ஆவது நாடாளுமன்றத்தில் பிரதமராக வெகு விரைவில் பதவி ஏற்கவிருக்கிறார்.

பாரதிய ஜனதாக் கட்சியும் ஜெயலலிதாவும் வெளிநாட்டில் பிறந்தவருக்கு இந்தியாவில் பிரதமராக வர உரிமை இல்லை என நாடளாவிய ரீதியில் பிரசாரம் செய்த போதிலும் அவை அனைத்தையும் தவிடுபொடியாக்கி நாட்டின் பிரதமராக வரும் சோனியா காந்திக்கு நல்வாழ்த்துக்கள். (து)

# இணைந்து கூட்டாட்சி அமைக்க காங்கிரஸ் - தேவகௌடா உறுதி

## பிரதமர் பதவி குறித்து ஆலோசனை நீடிக்கிறது

கர்நாடகத்தில் காங்கிரஸும் தேவகௌடா தலைமையிலான மதச்சார்பற்ற ஜனதா த்ளமும் இணைந்து கூட்டணி ஆட்சியமைப்பது உறுதியாகிவிட்டது.

ஆனால் முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றுவதற்கு இரு கட்சிகளுக்குமிடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

இரு தரப்பிலும் தலா 2 பேர் முதலமைச்சர் பதவிக்கான போட்டியில் உள்ளனர். கர்நாடக சட்டப் பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் 65 இடங்கள் பெற்ற காங்கிரஸும், 58 எம்.எல்.ஏ.க்கள் கொண்ட தேவகௌடா தலைமையிலுள்ள மதச்சார்பற்ற ஜனதாதளமும் கூட்டணி அமைக்கவுள்ளது.

கூட்டணி ஏற்பட்டால் இரு கட்சிகளும் இணைந்து கூட்டாட்சி அமைக்க வாய்ப்புள்ளது. இல்லாவிடில் காங்கிரஸ் கட்சிக்கு தேவகௌடா கட்சி வெளியில் இருந்து ஆதரவு அளிப்பதோ அல்லது மதச் சார்பற்ற ஜனதாதள ஆட்சியில் பங்கேற்காமல் காங்கிரஸ் ஆதரவு தருவதோ கூட சாத்தியமாகும்.

இவற்றுள் எந்தவகையான கூட்டணி என இதுவரை முடிவு செய்யவல்லை என்று தேவகௌடா டில்லியில் தெரிவித்தார். (து)

### சோனியா காந்திக்கு லாலு பிரசாத் ஆதரவு

ராஷ்ட்ரிய ஜனதா தள் தலைவர் லாலு பிரசாத் யாதவும் லோக் ஜனசகதித் தலைவர் ராம்விலாஸ பாஸ்வானும் அவசரமாக டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள்.

புறப்படுமுன் செய்தியாளர்களிடம் பேசிய லாலு பிரசாத் யாதவ் சோனியா காந்தி தான் புதிய அரசில் பிரதமராக வேண்டு மென்றார்.

புதிய அரசு 5 ஆண்டு காலம் ஆட்சியில் இருக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

ராம் விலாஸ் பஸ்வானும் இதே கருத்தை வலியுறுத்தினார். (து)

# தமிழக அரசுக்கு எதிராக 356 ஆவது பிரிவு ஜனநாயகப்படுகொலை என்கிறார் ராதாகிருஷ்ணன்

அரசியலமைப்புச் சட்டம் 356 ஆவது பிரிவைப் பயன்படுத்தி தமிழக அரசைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்ற பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸின் கோரிக்கை மூலம் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஜனநாயகத்தைப் படுகொலை செய்ய முயற்சித்து வருகிறார் என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் சி.பி.ராதா கிருஷ்ணன் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜெயலலிதா அரசைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று வாஜ்பாய் அரசிடம் கருணாநிதி நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தி வந்தார் என்றும், ஆனால் வாஜ்பாய் அதற்குச் செவிசாய்க்காததால் கூட்டணியிலிருந்து தி.மு.க வெளியேறியது என்றும் அவர் கூறினார்.

வெற்றிபெற்று 24 மணிநேரம் ஆவதற்கு முன்னாக 356 ஐ பயன்படுத்தவேண்டுமென்று ராமதாஸை விட்டு ஒரு வேண்டுகோளை விடுக்கவைப்பதும், அவருடைய உணர்வை நான் மதிக்கின்றேன் என்று சொல்வதும் ஜனநாயகத்தின் மது இவர்களுக்கு எத்தகைய பிடிப்பு இருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது என்றும் திருநாவுக்கரசர் கூறியது முற்றிலும் அவர் தனிப்பட்ட கருத்து; அதற்கும் பா.ஜ.க.வுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும் ராதாகிருஷ்ணன் மேலும் கூறினார். (து)

## இந்தியச் செய்திகள்

# காங்கிரஸ் ஆட்சியமைக்க தி.மு.க. ஆதரவு

## ஆதரவுக் கடிதத்தை கருணாநிதி வழங்கினார்

(புதுடில்லி)

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசு அமைக்க, காங்



கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியிடம் தி.மு.க. தலைவர் கருணாநிதி தமது ஆதரவுக் கடிதத்தை வழங்கினார்.

மத்தியில் அமையவிருக்கும் கூட்டணி அரசு பற்றி அப்போது இரு தலைவர்களும் விவாதித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையிலான கூட்டணி அரசுக்கு ஆதரவளிக்க தி.மு.க. உறுதி பூண்டுள்ளதாகக் கூறினார்.

புதிய அரசில் தி.மு.க. பங்கேற்குமா என்று கேட்டதற்கு அரசில் பங்கேற்க மாட்டோம் என்று நாம் சொல்லவில்லை, இது பற்றிய முடிவு கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தான் எடுக்கப்படவேண்டுமென்றார்.

புதிய அரசில் பங்கேற்குமாறு சோனியா காந்தி கேட்டுக் கொண்டதாகத் தெரிவித்த கருணாநிதி இது பற்றி முடிவெடுக்க சில வாரங்களோ, சில மாதங்களோ கூட ஆகலாம் என்றார்.

சில கூட்டணிக் கட்சிகள் அரசில் பங்கேற்பது பற்றி கேட்டதற்கு தேர்தலை ஒன்றாகச் சேர்ந்து சந்தித்தோம். ஆனால் அரசில் சேர்வது பற்றி அந்தத்தக் கட்சிகள் தான் முடிவை எடுக்கும் என்றார்.

பொடாச் சட்டத்தை நீக்குவதற்கு விரும்புகிறீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு பொடாச் சட்டத்தை நீக்க நாங்கள் வலியுறுத்துவோம் என்றார்.

தமிழைச் செம்மொழியாக அறிவிக்கக் கோரி வலியுறுத்துவதுடன் காவேரிப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணவும் மத்திய மதிப்புக் கூட்டு வரியை ரத்துச் செய்யவும் வலியுறுத்துவோம் என்றும் கருணாநிதி கூறினார். (து)

# கூட்டணிக் கட்சிகளுடன் நெருங்கிச் செயற்படுவேன்

## சோனியா காந்தி அறிவிப்பு

(புதுடில்லி)

காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவராக சோனியா காந்தி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மக்களவை உறுப்பினர்கள் கூட்டத்தில் அவர் தேர்ந்தெடுக்கப் பட்டதைக் கட்சியின் மூத்த தலைவர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

அப்போது நாடாளுமன்ற மைய மண்டபத்தில் கூடியிருந்த காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்திக்கு மலர்க் கொத்துக்களை அளித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே உரையாற்றிய சோனியா காந்தி காங்கிரஸ், அதன் கூட்டணிக் கட்சிகள் மத்தியில் நிலையான, உறுதியான அரசை அளிக்க உறுதி பூண்டுள்ளது என்றார்.

புதிய அரசு விவசாயிகள் பிரசசினைக்குத் தீர்வு காணவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் முன்னுரிமை அளிக்கும் என்று குறிப்பிட்டார்.

நாட்டில் மத இணக்கம் மற்றும் அமைதியைப் பேணிக் காக்கவும், தொழிலாளர், நலிவடைந்தோர் நலனுக்காகப் பாடுபடவும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு உறுதி பூண்டுள்ளது எனத் தெரிவித்தார்.

ஆர்.எஸ்.எஸ்.இன் கொள்கைகளையும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மோசமான கொள்கைகளையும் மக்கள் திட்டவட்டமாக நிராகரித்திருப்பதை மக்களவைத் தேர்தல் காட்டுகிறது எனக் கூறினார்.

ஆனால் அரசியலில் தனிப்பட்ட முறையில் அரசியல் தலைவர்களைத் தாக்கிப் பேசுவது மற்றும் எதிர்மறையான தேர்தல் பிரசாரங்கள் ஆகியவற்றை மக்கள் ஒட்டு மொத்தமாக நிராகரித்துள்ளனர் என்றார் சோனியா காந்தி.

கூட்டணிக் கட்சிகளுடன் நெருங்கிச் செயற்படப் போவதாகவும், விரைவில் கூட்டுப் பொதுத் திட்டம் இறுதி செய்யப்படுமென்றும் கூறிய சோனியா காந்தி இதில் கூட்டணிக் கட்சிகள் அளிக்கவிருக்கும் சேவைகள், கொள்கைகள், திட்டங்கள் இடம்பெறுமென்றும் தெரிவித்தார். (து)

### வலி.தென்மேற்கு

# பிரதேச சபையிலிருந்து எட்டுப்பேர் இடமாற்றம்

(பொன்னாலை)

வலி-தென்மேற்கு பிரதேச சபையிலிருந்து 8பேர் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். இவ்வாறு இடமாற்றம் பெற்று செல்வோர் நாளை 19ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளை பொறுப்பேற்பர் என தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் இடமாற்றம் பெற்றுச் செலபவர்கள் விபரம் பின்வருமாறு, இ.பரமநாயகம் கோப்பாய் சு.வை.அ.அலுவலகத்திற்கும் எஸ்.மனோகரன் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்திற்கும் திருமதி பே.சுகுமார் சுழிபுரம் பிரதேசசபைக்கும் பே.ஞானசூரியன் சுழிபுரம் பிரதேச சபைக்கும் எஸ். விஜயரட்ணம் யாழ்.வலக்கல்வி அலுவலகத்திற்கும் த.நாதசொரூபன் வலிகாமம் கல்வி அலுவலகத்திற்கும் திருமதி பு.சந்திரசேகரம் மானிப்பாய் சு.வை.அ.பணிமனைக்கும் ந.ஜெயசீலன் யாழ். கட்டடத் திணைக்களத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (4,49)

# தேசியப் பட்டியல் ஆசன விவகாரம் ரத்வத்தை அடுத்தடுத்து ஏமாற்றம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் ஆசனம் தமக்கு வழங்கப்படாமை குறித்து முன்னாள படைத்துறை பிரதி அமைச்ர அனுருத்த ரத்வத்தை ஏமாற்றமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான தனது விருப்பத்தினை இவர் தெரிவித்திருந்தபோதிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதற்கு அங்கீகாரம் வழங்கவில்லை.

2001 ஆம் ஆண்டுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற முஸ்லிம் இளைஞர்கள் படுகொலைச் சம்பவத்துடன் இவரும், இவரது புதல்வர்களும் சம்பந்தப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதனாலேயே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த அனுமதியை வழங்கியிருக்கவில்லை.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூவரின் ஆசனங்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீளப் பெற்றிருந்த வேளை, அந்த மூவரின் இடத்தில் ஒரு இடம் தமக்கு வழங்கப்படலாம் என அனுருத்த ரத்வத்தை எதிர்பார்த்திருந்திருந்தார்.

ஆனால், புதிய தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, மேர்வின் சில்வா, விஜயதாஸ ராஜபக்ஸ ஆகியோர் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டிருப்பதால், இவர் பலத்த ஏமாற்றமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# அரசுக்கு அழுத்தம் கொடுக்க குழு அமைக்கும் முயற்சியில் ஜே.வி.பி.

ஐக்கிய மக்கள் சுதந்திர முணணி அரசாங்கத்திற்குள் ஒரு குழுவினைத் தோற்றுவித்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சிகளில் ஜே.வி.பி. ஈடுபட்டு வருவதாகத தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் சமாதானப் பேச்சுவாாத்தைகளில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை உள்ளிட்ட புலிகள்ின் சில கோரிக்கைகளை அரசாங்கத்தால் நிறைவேற்றப்படுவதைத் தடுக்கும் ஒரு முயறசியாகவே இக்குழு அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, இக்குழுவினைத தோற்றுவிப்பது தொடர்பான முயற்சிகளில் ஜே.வி.பி.யின் தலைவரான சோமவன்ச அமரசிங்கவின் தலைமையிலான அதன் மத்திய குழு உறுப்பினர்கள் 9 பேர் கொண்ட குழுவொன்று ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளான ஈ.பி.டி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, அஷ்ரப் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடனும் இதுதொடர்பான ஆலோசனைகளில் ஜே.வி.பி. ஈடுபடவுள்ளதுடன், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் இச்செய்திகள் தெரிவித்தன.

எதிரக கட்சியாகத் தாம் இருந்தபோது தெரிவித்த பல கருத்துக்களுக்கு மாறாக, இப்போது விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடாத்த ஜனாதிபதி இணங்கியுள்ளதை ஜே.வி.பி. உட்பட்ட முன்னணியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர். இது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்களுடன் பேச்சுவார்தைை நடாத்தப்படவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ)

### அரிசியின் விலை விரைவில் குறையும்

# அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே மீண்டும் உறுதிமொழி

(கொழும்பு)

விவசாயிகள், நுகர்வோர் ஆகிய இரு தரப்பினருக்கும் பாதிப்பு ஏறபடாதவகையில் அரிசியின் விலை குறைக்கப்படும் என வாத்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவா இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

உளளூர் விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவுசெய்து நியாயமான விலையில் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, சில வர்த்தகர்கள் பெருமளவு நெல்லைப்பதுக்கி வைத்துள்ளார்கள் என முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றதால் வெளிநாடுகளில் இருந்தும் அரிசியை இறக்குமதிசெய்து மக்களுக்கு நியாயமான விலையில் தேவையான அளவு வழங்க நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

இந்த நடைமுறை விவசாயிகளை பாதிக்காத வகையிலேயே அமுல்ப்படுத்தப்படும்.

மேலும் விவசாயிகளுக்கு ஏனைய தானிய வகைகளை உற்பத்திசெய்வதற்கும் ஊக்குவிப்பும் உதவியும் வழங்கப்படும்.

இத்தகைய அத்தியாவசிய உணவுப் பொருட்களை நியாயமான விலையில் விற்க கூட்டுறவுச்சங்கங்களை பயன்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (60,10)

### பேச்சுவார்த்தைக் குழுவிலிருந்து

# கதிர்காமரை நீக்கியதால் ஐ.ம.சு.முன்னணியில் குழப்பம்

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைக்குழுவில் சிறிலங்காவின் அரச தரப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமரை இணைத்துக் கொள்ளாத விவகாரம ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குள் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச நாடுகள் பல தடை செய்வதற்குக் காரணமாகவிருந்த லக்ஷமன கதிர்காமர் தற்போது அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் அரசியலமைப்புச் சபையில் உள்ள சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான அரச தரப்புப் பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது நெருங்கிய அரசியல் ஆலோசகர்களுமே ஈடுபட்டதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை, அரச தரப்புப் பேச்சுவார்தைக்குழுவில் லக்ஷமன் கதிர்காமர் இடம்பெறுவதை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதாலேயே, அரச தரப்பு பேச்சுவார்த்தைக் குழுவில் காதிர்காமரை ஜனாதிபதி சேர்த்துக் கொள்ளவில்லை என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (8)

# மகாபொல கொடுப்பனவுத் தொகையை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை

### கட்டளைச்சபையும் அமைக்கப்படும்

(கொழும்பு)

பலகலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுத் தொகையை அதிகரிப்புச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் இது தொடர்பில் உள்ள இறுக்கமான நடைமுறைகளை தளர்த்துவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதனபடி புலமைப்பரிசில் பெறும மாணவர்களின் மதிபபீட்டுக் குடும்ப வருமானம் ரூபா 12ஆயிரத்துக்கும் மேலாக நோக்கப்படுவதுடன், அரச சேவையில் உள்ள ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் இது வழங்கப்படும் .

அரச சேவையில் இருந்தும் கூட மிகக் குறைவான ஊதியத்தைப்பெறும் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவு வழஙகப்படுவதில்லை. ஆனால் தனியார் துறையில் மிக அதிகமாக வருமானம் ஈடுட்டும் பெற்றோர்களுடைய பிள்ளைகளுக்கு இது வழங்கப்பட்டு வருகின்றது.

இச் செயலானது அநீதியானது என மக்கள் செய்த முறைப்பாடுகளுககு அமைவாகவே இந்தத் தீமானங்களை அரசு எடுத்துள்ளது.

இது தொடர்பில் ஆராய மகாபொல கட்டளைச் சபை ஒன்றும் நிறுவப்படவுள்ளது. பிரதம நீதியரசர் தலைமையில் அமைய உள்ள இச்சபை மகாபொல புலமைபரிசில் திட்டத்தில் தற்போதைய நடைமுறைச சிக்கல்களுக்கு தீவு கண்டு புதிய திட்டங்களை அமுல் செய்யும் என வர்த்தக நுகர்வோர் விவகாரங்களுக்கான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே தெரிவித்தார். (4,63)

# யாழில் உள்ள பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்த ஒத்துழைப்பேன்

### சிவநேசன் எம்.பி.உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களை நம்பிவாழ்கின்ற குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் என்னால் ஆன முழுமையான ஒத்துழைப்பையும் நல்குவேன்.

இவ்வாறு யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான கி.சிவநேசன் மானிப்பாயில் நடாத்தப்பட்ட வரவேற்புவிழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கஙகளின் கொத்தணியின் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெற்ற வரவேற்புவிழாவில் கூட்டமைபபின் பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி. பத்மினி சிதம்பரநாதன், ஜீ.கஜேந்திரகுமார் மறறும் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

பாராளுமனற உறுப்பினா கி.சிவநேசன் அங்கு தொடர்ந்து குறிப்பிடும்போது,

இங்கு இயங்கிவருகின்ற பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களில் பணிசெய்கின்ற தொழிலாளர்கள் பல குறைபாடுகளுக்கு மத்தியில் உயிர்களைக் கையில் பிடித்தவண்ணம் தமது வேலைகளைச் செய்துவருகின்றனர். இந்தக் கூட்டுறவுச்சங்கங்களை நம்பியிருக்கும் குடும்பங்களை சுயசார்புத் தன்மைக்கு ஆக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் பங்கொள்ளவென ஏழு கூட்டுறவுச்சங்களில் இருந்து உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர். (4-16)

### குடத்தனை–மணற்காட்டிற்கிடையே

# கடற்கரை ஓரமாக புதிய வீதி ஒன்றை அமைக்க நடவடிக்கை

(பளை)

வடமராட்சி கிழக்கு குடத்தனை மணற்காடு ஆகிய கிராமங்களை இணைத்து கடற்கரை ஓரமாக புதிய வீதி ஒன்று அமைக்கப்படவுள்ளது.


வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தினால் இவ்வீதி அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மேற்படி இரு கிராமங்களிற்குமிடையே வீதி ஒன்று அமைக்கப்பட்டிராமையால் இப்பகுதி மககள் புல அசௌகரியங்களையும் அனுபவித்து வந்தனர். அத்துடன் 8 கிலோ மீற்றர் தூரம் அதிகமான பருத்தித்துறை நாகர்கோவில் வீதியூடாகவே பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இவ்விரு கிராம மக்களுக்கும் இருந்து வந்தது.

இதனைக் கருத்தில்கொண்டே இவ்வீதி அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் குடத்தனை மணற்காடு ஆகிய இரு கிராமத்தவர்களும் பெரும் பயனடைவர் என எதிர்பாக்கப்படுகின்றன. (4-97)

# மூக்கு இணை உள்துவார அழற்சிக்கு

மூக்குக் குழிகளின் இருமருங்கிலும் அமைந்திருக்கும் சளிச் சவ்வுகளில் ஏற்படும் அழற்சியே 'சைனசைட்டிஸ்' அல்லது 'மூக்கு இணை உட் துவார அழற்சிக் கோளாறு' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இவ்வழற்சி பொதுவாக, சாதாரணச் சளி, இன்புளூயன்ஸா, பொதுவான தொற்றுகள் ஆகியவைகளைத் தொடர்ந்து வருகிறது. உடலால் வெளியேற்றப்படும் சில கிருமிகள் சில சமயங்களில் மூக்கின் உள் துவாரங்களின் இருமருங்கிலும் புகுந்து கொண்டு அழற்சியைத் தோற்றுவிக்கிறது.




'சைனஸ்' என்றால் 'எலும்பு உட் துவாரம்' என்று பொருளாகும். முகத்திலுள்ள எலும்புகளில் உள்ள உட்துவாரங்கள் சைனஸ்கள் என்றழைக்கப்படுகின்றன. இந்த சைனஸ்கள் மூக்குடனும் மேற்தொண்டையோடும் இணைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தொற்று வெகு எளிதில் பரவிவிடுகின்றது.

நெற்றியைச் சார்ந்த **(Frontal)**

மேற்தாடை சார்ந்த **(Maxillary)**

மூக்கடி எலும்பு சார்ந்த **(Ethmoid)**

மண்டையோட்டு அடிப்புற கூட்டெலும்பு சார்ந்த **(Sphenoid)**

உட்துவாரங்கள் மூக்குக் குழிக்கு இருமருங்கிலும் அமைக்கப்பட்டு மூக்குடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. நெற்றி சார்ந்த உட்துவாரங்கள் கண்களுக்கு மேலாக இருக்கும் எலும்பின் மீது அமைந்திருக்கின்றன. மேல்தாடை சார்ந்த உட்துவாரங்கள் மூக்கின் இருபுறங்களிலும் கன்ன எலும்புகளுக்கு அடியில் அமைந்திருக்கின்றன. மூக்கடி எலும்பு மற்றும் மண்டையோட்டு அடிப்புற கூட்டெலும்பு சார்ந்த உட்துவாரங்கள் மூக்கின் பின்புறத்தில் அமைந்திருக்கின்றன. காற்று நிரம்பியிருக்கும் இந்த உட்துவாரங்கள் மண்டையோட்டின் பாரத்தை இலகுவாக்கி குரலுக்கு அதிர்வொலிப் பெருக்கத்தைக் கொடுக்கின்றன.

### நோய்க்குறிகள்

தொடர்ந்த- மிதஞ்சிய தும்மல், ஒழுகும் மூக்கு, நாசியின் ஒரு பகுதியில் அல்லது இரண்டிலுமே அடைப்பு, தலைவலி, தலையில், முகத்தில், கண்களில் அழுத்தம் ஆகியவை சில முக்கிய நோய்க் குறிகளாகும். மூக்கு உட்துவாரத் தொற்றினால் ஏற்படும் தலைவலிகள் நெற்றியிலும் கண்களுக்கு அடியிலும் உணரப்படும்.

நோயாளி சற்று காய்ச்சலினாலும், பசியின்மையாலும், பசியுணர்வு அற்றுப்போவதினாலும், பல்வலியினாலும் அவதிப்படலாம்.

மிகுந்த கஷ்டத்தோடு மூச்செடுக்க வேண்டியதிருக்கலாம். மூக்கடைப்பினால் குரலும் பாதிக்கப்படலாம்.

### காரணங்கள்

மூக்கடைப்பினால் உட்துவாரப் பகுதிகளில் அடர்த்தி அதிகரித்து அழற்சி ஏற்படலாம். தலை, தொண்டை, மூக்கு ஆகிய பகுதிகளில் அகவுரை போன்று படிந்திருக்கும் சவ்வுகளில் சளி அதிகமாகச் சுரப்பதால் இவ்வாறு ஏற்படுகின்றது. நச்சுக்களால் இரத்தத்தில் ஏற்படும் கூருணர்வால் இச் சுரப்பு மிதமிஞ்சிவிடுகின்றது.

உட்துவாரத் தொற்றிற்கு முககியமான காரணம் தவறான உணவே. ஒரு நபர் சில வகைப்பட்ட உணவுகளையோ பானங்களையோ தொடர்ந்து உட்கொள்ளும் போது அவரது உடல் ஒரு நிலையில் அமைந்துவிடுகிறது. அதன் விளைவாக, சில நபர்கள் சில ஒவ்வாமைக் காரணிகளால் பாதிக்கப்படுகின்றனர். அதன எதிர்விளைவு இறுதியில் உட்துவாரத் தொற்றாக மாறிவிடுகிறது.

இந்த உட்துவாரத் தொற்று ஒவ்வாமையினால் (அலர்ஜியினால்) ஏற்படுகிறது என தற்கால மருத்துவ முறை குறிப்பிடுகின்றது. ஒவ்வாமைக்கான காரணிகளைக் கண்டறிந்தபின் நோயெதிர்ப்புச் சக்தியை கட்டுவிப்பதற்காக நோயாளிகளுக்கு மருந்துகளையும், ஊசிமருந்துகளையும் பரிந்துரை செய்கின்றனர். இது தற்காலிகமாக நோவு தணிக்கும் நாட்பட்ட சிகிச்சை முறையாகும்.

இச் சிகிச்சையினால் பூரண குணமாகுதலைக் கொடுக்க முடிவதில்லை. நோயாளிகளுக்கு, சிலவாசனைப் பொருட்கள் (கிராம்பு

## மருத்துவ விளக்கம்

போன்ற), பூக்கள், சென்ட்கள், புகை, சில செடிகள், பிராணிகள் ஆகியவைகளினின்று விலகியிருக்குமாறு ஆலோசனை அளிக்கப்படுகிறது. பொதுவாக, அநேகத் தடவைகளில், ஒரு குறிப்பிட்ட நோயா

## இயற்கை வைத்தியம்

ளிக்கு அலர்ஜியாக இருப்பவை எவை எனக் கண்டறிவது மிக மிகக் கடினம்.

### பிணி நீக்கும் முறை

மூக்கின் உட்துவாரத் தொற்றிற்கு சிகிச்சையை ஆரம்பிக்கும் போது தவறான உணவை சரிப்படுத்துவதே முதல் சிகிச்சையாகும். நோயாளிகள் சமச்சீர் உணவை உண்ணவேண்டும். இந்தத் தொற்றினால் அவதிப்படுபவர்களில் அநேகர் அமிலத் தன்மையினாலும் அவதிப்படுகின்றனர். எனவே, அவர்களது உணவு காரத்தன்மையுடையதாக அமையவேண்டும். உப்பு திசுக்களில் நீரை அதிகரித்து கல்சியத்தை உடலினின்று வெளியேற்றிவிடுவதால் மிகக்குறைவாக உப்பை உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இந்த நோய் கடுமையாகப் பாதிக்கும் கட்டத்தில் காய்ச்சலும் காணப்படும்போது! திட ஆகாரத்தை முற்றிலுமாக நிறுத்திவிட்டு புத்தம் புதிய காய்கறி - பழச்சாறுகளை 50.50 என்ற விகிதத்தில் நீருடன் கலந்து அருந்தவேண்டும். காய்ச்சல் குறைந்த பின்னர் மிகக் குறைந்த கலோரிகளைக் கொண்ட சமைக்கப்படாத காய்கறி பழங்களை உண்ணலாம். சாறுகளை அருந்தலாம்.

கடுமையான நோய்க்குறிகள் மறைந்த பின்னர் நோயாளி மூன்று அடிப்படை உணவுப் பகுதிகளைச் சேர்ந்த நல்ல சமச்சீர் உணவை உண்ணவேண்டும். தொற்று நாட்பட்டதாக இருப்பின் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஒரு வாரத்திற்கு சாறுசிகிச்சை எடுப்பது நல்லது.

உட்துவாரத் தொற்றினால் அவதிப்படுபவர்கள் மாவுப்பண்டங்கள், பொரித்த உணவுகள், சர்க்கரை **(White poison)**, மைதா மாவு, மாக்கரோனி சம்பந்தப்பட்ட பண்டங்கள் போன்றவைகளை கண்ணாலும் பார்க்கக்கூடாது. கிராம்புபட்டை போன்ற வாசனைப் பொருட்கள், இறைச்சி சார்ந்த பண்டங்களை தவிர்க்கவேண்டும். வெண்ணெய், நெய் ஆகிய பொருட்களை என்றாவது ஒரு நாள் தொட்டுப்பார்க்கவும். சர்க்கரைக்குப் பதிலாக தேனைச் சேர்க்கவும். ஒவ்வொரு வேளை உணவும் புதிதாகச் சமைத்து உண்ணப்படவேண்டும். காய்கறிகள் ஏராளமாக உட்கொள்ளப்படவேண்டும். சிச்சிலிப் பழவகை சேர்ந்த எலுமிச்சை, ஆரஞ்சு மற்றும் கிரேப்பழம் தவிர மற்ற எல்லாப் பழங்களையும் உண்ணலாம். திசுக்களிலுள்ள அழற்சியை கல்சியம் குறைத்துப் போடுவதால் ஏராளமாகப் பால் அருந்தவும்.

சளியை, உட்புழைத்தொற்றை ஒழிக்க செயல்படுவது விட்டமின் ஏ செறிந்த உணவாகும். சவ்வுகளை நல்நிலையில் வைத்து காக்கும் தன்மை விட்டமின் ஏ க்கு இருப்பதால் தலையிலும் தொண்டையிலும் ஆரோக்கியமான சளிச் சவ்வுகளைக் கட்டுவிக்க உதவுகிறது. மற்றும் பால், தயிர், முட்டையின் மஞ்சள் கரு, பூசணிக்காய், கரட், கீரைகள், தக்காளி, மாம்பழம், பப்பாளி ஆகியவைகளில் விட்டமின் ஏ ஏராளமாக அடங்கியிருக்கின்றது.

உட்புழைத் தொற்று ஆரம்பமானவுடன் தினமும் 2500 அகில உலக அலகு வீதம் விட்டமின் ஏயைப் பெற்றுக்கொண்டால் நோவு தணிய ஆரம்பிக்கும். விட்டமின் சியும் பயனுள்ளது என நிருபிக்கப்பட்டிருப்பதினால் ஒவ்வொரு டோஸிலும் 500 மி.கி.வீதம் இரு முறை இந்த விட்டமின்களை எடுக்கவேண்டும்.

சுவாசப் பாதையில் சளிச் செறிவை உடைக்கும் சக்தி வெள்ளைப்பூண்டிற்கும் வெங்காயத்திற்கும் இருப்பதால், நல்ல பலன்களைப் பெறுவதற்கு பாதிக்கப்பட்ட நோயாளிகள் இவைகளை உண்ணவேண்டும். சிறிதளவில் ஆரம்பித்து நாளடைவில் அதிகரிக்கவேண்டும். உணவோடும் இவைகளைச் சேர்த்துக் கொள்வதால் ஏராளமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தத் தொற்றிற்கு சிகிச்சையாக கரட் சாறு குடிக்கலாம். அல்லது கரட்டை பீட்ருட் வெள்ளரிச் சாறுகளோடு கலந்து குடிக்கலாம். அல்லது பசளைக்கீரைச் **(Spinach)** சாறுடன் கலந்து குடிக்கலாம். இது மிகச் சிறந்த பலனை அளிக்கவல்லது. பீட்ருட் சாறு 3 அவுன்ஸூம், வெள்ளரிச் சாறு 3 அவுன்ஸூமாக 10 அவுன்ஸ் கரட் சாறுடன் கலந்து அருந்தலாம். அல்லது ஆறு அவுன்ஸ் பசளைக் கீரைச்சாறை 10 கரட் சாறுடன் கலந்துகொள்ளலாம்.

**டாக்டர் க.சுரேஷ்**

### நீர் சிகிச்சை

உட்துவாரத் தொற்றுகளின் மீது குளிர் ஒத்தடம் கொடுத்தல் நோவைத் தணிக்கும். குளிர்ந்த, சூடான ஒத்தடங்களை மாறி மாறிக் கொடுப்பினும் நல்ல பலன் கிட்டும்.

இரண்டு பாத்திரங்களில் குளிர்ந்த, சூடான நீரை வைத்துக் கொண்டு, முதலில் சுடுநீரால் முகக் குளியல் செய்யுங்கள். ஏற்கக்கூடிய அளவுவரை சுடு நீரை வைத்து இவ்வாறு செய்யுங்கள்.

பின்னர் சற்று நேரத்திற்கு குளிர்ந்த நீரால் முகக் குளியல் செய்யுங்கள். ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஒருமுறை, 5நிமிட நேரத்திற்கு வேது பிடித்தல் வேதனையை வெகுவாகக் குறைக்க வல்லது.

இச் சிகிச்சையின்போது ஆழ்ந்த நித்திரை, போதிய ஓய்வு, தூய காற்று ஆகியவை மிகவும் அவசியமானவை. □

---

## ம.ம.மு. தலைவர் சந்திரசேகரன்

# தமிழக தலைவர்களுடனான சந்திப்பு குறித்து பிரபாகரனுக்கு விரைவில் எடுத்துக் கூறுவார்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை குறித்த தமிழ்கத் தலைவர்களின் நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு விரைவில் தெளிவு படுத்திக் கூறவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ.சநதிரசேகரன் தெரிவித்துள்ளார்.



கடந்த 15 ஆம் திகதி தமிழகத்திற்கு விஜயம் செய்த சந்திரசேகரன் நேற்று நாடு திரும்பினார்.

நாடு திரும்பிய சந்திரசேகரன் தமது விஜயம் குறித்து ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண்பதற்கு இந்தியா குறிப்பாக தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என வலியுறுத்துவதற்காக கடந்த சனிக்கிழமை தமிழகம் சென்றிருந்தேன்.

அங்கு தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி, தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் இராமதாஸ், ம.தி.மு.க. தலைவர் வை.கோபாலசாமி ஆகியோரைச் சந்தித்துப் பேசினேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்தலைவர் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் ஈழத் தமிழர் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பாங்கினை கடைப்பிடிப்பதை விடுத்து ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க முன்வரவேண்டும் எனவும் அவர்களைக் கேட்டுள்ளேன்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் மலையக மக்கள் முன்னணி பிரதிநிதிகளும் இணைந்து இந்திய தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்குரிய சகல ஏற்பாடுகளையும் நான் செய்துள்ளேன்.

இந்தப்பேச்சுவார்த்தை எதிர் வரும் யூலை மாதம் அளவில் நடைபெறவுள்ளது என்றார்.

மலையக மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் சந்திரசேகரனுடன் பெ.இராதா கிருஷ்ணன், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் ஆலோசகர் தினேஷ் வீரக்கொடி ஆகியோரும் தமிழகம் சென்றிருந்தனர். (10)

# நிலக்கரி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டை நீக்க ஐரோப்பிய யூனியன் வலியுறுத்து

நிலக்கரி ஏற்றுமதி மீதான கட்டுபபாட்டை சீனா உடனடியாக நீக்க வேண்டும். இல்லாவிடில் உலக வர்த்தக அமைப்பு சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கும் என்று சீனாவுக்கு ஐரோப்பிய யூனியன் எச்சரித்துள்ளது.

உலக வர்த்தக அமைப்பின் விதிகளின்படி நிலக்கரி ஏற்றுமதிக்கு தடைவிதிக்கக்கூடாது. இருப்பினும் உள்நாட்டில எஃகு தொழிற்சாலைகளைப் பாதுகாக்கும் நோககத்துடன் நிலக்கரி ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது சீனா.

சீனாவின் இந்நடவடிக்கையால் உலக சந்தையில் எஃகு விலை எக்கச்சக்கமாக ஏறிவிட்டதாக ஐரோப்பிய எஃகு உற்பத்தியாளர்கள் புகார்செய்தனர்.

இதுகுறித்து சீனாவுக்கு ஏற்கனவே காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது. காலக்கெடு முடிந்துவிட்ட நிலையில் சீனாமீது நடவடிக்கை எடுப்பதைத்தவிர வேறு வழியில்லை என்று ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

2001இல் உலக வர்த்தக அமைப்பில் உறுப்பினர் நாடாக சீனா சேர்ந்தது அதன்பிறகு சீனா மீது ஐரோப்பிய யூனியன் இப்போது தான் முதன்முதலாக நடவடிக்கை எடுக்கவுள்ளது.

(து)

# பிரான்ஸ் திரைப்பட விழாவில் பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல்

(பிரான்ஸ்)

பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் நடைபெற்று வரும் சர்வதேச திரைபபட விழாவின் போது திரைபபடத் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்க சென்ற பத்திரிகையாளர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டனர்.

இச்சம்பவம் சனிக்கிழமை இரவு நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தை படம் பிடிக்க முயன்ற பத்திரிகைப் புகைப் படக்காரரைத் தரையில் தள்ளி பொலிஸார் தாக்கினர். பொலிஸார் நடத்திய தாக்குதலில் நோர்வே நாட்டு நிருபர் உள்ளிட்ட சில பத்திரிகையாளர்களுக்குக் காயம் ஏற்பட்டது .

வேலையில்லாமல் இருக்கும் காலத்துக்கு அளிக்கப்படும் சலுகைகள் குறைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து திரைப்படத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

(து)

# பாகிஸ்தான் அருங்காட்சியகத்தில் சீக்கிய வரலாற்றுப் பிரிவு

பாகிஸ்தானின் லாகூர் நகரிலுள்ள அருங்காட்சியகத்தில் சீக்கிய வரலாற்றைச் சித்திரிக்கும தனிப்பிரிவை அமைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகவலை அருங்காட்சியத்தின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள குல்ஸார் முசாத்தி தெரிவித்ததாக அந்த நாட்டில் இருந்து வெளிவரும் டெய்லி டைம்ஸ் பத்திரிகை செய்தியாக வெளியிட்டுள்ளது.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

அருங்காட்சியத்தின் பாதுகாப்பைத் தீவிரப்படுத்த அமெரிக்க நிபுணர்களுடன் ஆலோசனை நடைபெற்று வருகிறது. இதில் ஹந்து ஜைனம் மற்றும் இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக சீககிய வரலாற்றுப் பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. சீக்கியப் பிரிவில் 40ஆயிரத்துககும் மேற்பட்ட கலைப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும். பொற்கோயிலின் மாதிரி வடிவம், புனித குரு கிரந்த சாகிப் ஆகியவையும் அதில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(து)

# பிரேசில் விமான விபத்தில் 33 பயணிகள் கதி என்ன?

(ஜெனிரோ)

பிரேசில் விமானம் விபத்துக்குள்ளாகியது அதில் 3 சிப்பந்திகள் உள்பட 33 பயணிகள் இருந்தனர். அவர்களின் கதி என்ன வென்று தெரியவில்லை.

மானோஸ் நகருக்கு அருகே அமேசான் பகுதியில் விமானம் விபத்துககுள்ளாகியது. தேடுதல் பணியில் இறங்கிய ஹெலிகொப்டர் மூலம் விமானச்சேதம் கண்டு பிடிக்கப்பட்டது.

இருபபினும் உயிர்ச்சேதம் குறித்த விபரம் உடனடியாக தெரிய வில்லை.

கொலம்பிய அருகேயுள்ள சாவோ பவுலோ டி ஒலிவென்சா நகரில்இருந்து புறப்பட்ட இந்த விமானம் சாவோ கேப்ரியல் டா காச்சூய்ரதாவில் இறங்குவதாக இருந்தது இருப்பினும் வந்து சேரவில்லை என்று அதிகாரிகள் தெரி வித்தனர்.

(து)

# ஈராக்கில் கைதிகள் சித்திரவதை இனிஒருபோதும் நடக்காது – புஷ்

(வாஷிங்டன்)

ஈராக்கில் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவங்கள் இனி ஒரு போதும் நடக்காது என்று உறுதிபட தெரிவித்தார் அமெரிக்க அதிபர் புஷ். வாஷிங் டனில் அதிபர் புஷ் நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈராககில் ஜனநாயக மற்றும் சுதந்திரமான அரசும் அமைவதற்கு அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்கும்.

ஈராக்மக்களின் மீதுஎங்களுக்கு மிகுந்த மரியாதை உண்டு. ஈராக் கைதிகளைச் சித்திரவதை செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உறுதிபூண்டுள்ளோம் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள் அமெரிக்க இராணுவ வீரர்கள் 7பேர் மீது புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அடுத்தவாரம் விசாரணை தொடங்கும். இது போன்ற சித்திரவதை சமபவங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என்பதில் எனது அரசும் இராணுவமும் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது.ஈராக்கில் அமெரிக்கர் ஒருவரது தலையை பயங்கரவாதிகள் துண்டித்து கொடூரமாக கொலை செய்தது மிகவும் கண்டிக்கத்தக்கது.

பயங்கரவாதிகள் காட்டுமிராண்டிகள் அதனால் அவர்களுடன் போராடித் தான் வெற்றி பெற முடியும். இதைத தான் ஈராக்கில் கூட்டணிப் படைகள் செய்துவருகின்றன.

ஈராக்கின் சுதந்திரத்தை எதிர்ககும் எதிரிகளைத் தோல்வி அடைய செய்தால் தான் அந்நாட்டுத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்ற முடியும். ஈராக்கியர்களின் சுதந்திர ஜனநாயக நாடு என்ற கனவை நனவாக்க முடியும்.

அடுத்த சில வாரங்களில் இடைக் கால அரசு குறித்த முக்கிய முடிவுகள எடுக்கப்படவுள்ளன. ஜூன் 30ஆம் திகதி சுதந்திரஈராக்கொடி அங்கு பறக்கும் இருந்தபோதிலும் ஈராக்கியர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகக கூட்டணிப் படைகள் சில காலம் அங்கு இருக்க வேண்டிய அவசியம் இருக்கும் என்றே கருதுகிறேன் என்றார் அதிபர் புஷ்.

(து)

# குண்டுவெடிப்பில் பௌத்த ஆலயங்கள் சேதம்

(பாங்கொங்)

தாய்லாந்தில் மூன்று பௌத்த ஆலயங்களில் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன.

மரட்டி மாகாணத்தில் அமைந்த இந்த ஆலயங்கள் சேதமடைந்த போதும் எந்தவித ஆட்சேதமும் நடைபெற்றதாகத் தகவல்கள் இல்லை.

(து)



இத்தாலியின் இயற்கை வனப்பு நிறைந்த காட்சிகள் சிலவற்றைப் பார்க்கலாம்

# சிரியாவை நோக்கிச் சீறும் அமெரிக்கா

கடந்த செவ்வாயன்று தமது எல்லைகளை மூடுவதற்கு தவறியதற்காகவும் தீவிரவாதத்துக்கு ஆதரவு கொடுத்ததற்காகவும் சிரியா நாட்டின்மீது அமெரிக்கா வர்த்தகத தடைகளை விதித்தது. இந்தத்தடைகளின்படி சிரியா நாட்டிற்குள் அமெரிக்கா ஏற்றுமதிசெய்ய இயலாதென்றும் அமெரிக்காவிலுள்ள சிரியா நாட்டுச் சொத்துக்கள் முடக்கப்பட்டன.

அமெரிக்காவின் தடைகளால் சிரியா எந்தவிதத்திலும் பாதிப்படையாது என்று அது கூறுகிறது.

அமெரிக்காவின் குற்றச்சாட்டான பேரழிவு ஆயுதங்களை வைத்திருத்தல் தீவிரவாதிகளுக்கு ஆதரவளித்தல் போன்றவைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறது.

பாலஸ்தீனியர்களை சிரியாவிலிருந்து வெளியேற்ற முடியாதென்றும், அமெரிக்காவின் தடைகள் தம்மை எந்தவிதத்திலும் அடிபணியச் செய்யாது என்றும் சிரியா நாட்டுக் குடியரசுத் தலைவர் பஸீர் அதாத் அறிவித்துள்ளார்.

அரபு நாடுகளிடையே செல்வாக்கு இழந்துவரும் அமெரிக்கா தற்போதைய நிலையில் தங்களை ஒன்றும் செய்துவிட முடியாதென்று சொல்லிவருகிறது.

1967முதல் தனது நிலப்பரப்பை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளதாகவும் சிரியா நாடு கூறிவருகிறது.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட தடைகளை திரும்ப்பெற வேண்டும் என்றும் நியாயமற்றவையென்றும் பிரச்சினைகளை அதிகப்படுத்தப்படாதென்றும் சிரியா பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை அமெரிக்க தடை கள் சிரியா நாட்டை அதிகளவில் பாதிககப் போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த தடைகளால் எந்த நாடும் பயன்பெறப்போவதில்லையென்று சிரியா நாட்டின் வெளியுறவு அமைச்சர் பருள்பாரா கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிரியா நாட்டில் எண்ணெய்த்துறையில் பணியாற்றும் அமெரிக்கக் கம்பனிகளை ஓரளவு பாதிக்கும் என்று தெரிகிறது. அமெரிக்காவின் நன்மதிப்பைப் பெற்ற குவைத்நாடு கூட தடைகளுக்கு எதிரான கருத்தை தெரிவித்துள்ளது. இது சிரியாவிற்கு மிகுந்த மகிழ்ச்சி தந்துள்ளது. ராக்கின் ஆக்கிரமிப்பிலிருந்து குவைத் விடுபடுவதற்கு சிரியா நாடு செய்த உதவிகளை குவைத் வெளியுறவு அமைச்சர் முகமது அல் சபா இந்த தருணத்தில் நினைவு கூர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பெரும்பான்மையான அராபிய நாடுகள் அமெரிக்காவின் தடைகளை எதிர்த்து கருத்துத் தெரிவித்த வண்ணம் இருக்கின்றன.

பாலஸ்தீனப் பிரச்சினை, ஈராக் பிரச்சினை சிரியா நாட்டிற்கு எதிரான தடைகள் என அமெரிக்க அரசு தொடர்ந்து எதிர்மாறான செயல்களை செய்துவருவதாக அரபுநாடுகளில், செயலாளர் அமர்முஸா கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஈராக பிரச்சினையில் மூக்குடைபட்ட அமெரிக்கா தொடர்ந்து அரபு நாடுகளுக்க எதிராக ஈடுபடுவதாக கருதப்படுகிறது.

(து)

WORLD NEWS உலக தரிசனம்

# அணியில் மீண்டும் இணைய விலகிச் சென்ற 12வீரர்களுக்கும் 21நாட்கள் காலக்கெடு விதிப்பு

சிம்பாப்வே கிரிக்கெற் அணியிலிருந்து வெளியேற்றப்பட்ட 12 வீரர்களையும் அணியிலிருந்து நீக்குவது என்ற முடிவை சிம்பாப்வே அணி கைவிட்டது.

இதற்குப் பதிலாக இந்தப் 12 வீரர்களும் மீண்டும் அணியில் இணைந்து விளையாடுவதற்கு வசதியாக 21நாட்கள் காலக்கெடுவுடனான புதிய அறிக்கையொன்றை சிமபாப்வே கிரிக்கெற் சபை அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், கிரிக்கெற் விளையாட்டின் நன்மையைக் கருத்தில்கொண்டு 12 வீரர்களையும் அணியிலிருந்து நீக்கும் முடிவு கைவிடப்பட்டது.

கிரிக்கெற் ஒழுங்கு நடத்தை விதிகளை மீறியதைச் சரிசெய்து கொள்ளவும், பயிற்சிகளில் தொடர்ந்தும் கலந்துகொள்ளவும், இதன் மூலம் சிம்பாப்வே அணியில் மீண்டும் இடம்பெறவும் வசதியாக 12 வீரர்களுக்கும் 21நாட்கள் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்த காலக்கெடு கடந்த 14 ஆம் திகதி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தக் காலக்கெடுவைப் புறக்கணிக்கும் வீரர்களின் ஒப்பந்தங்களும் இரத்துச்செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிம்பாப்வே அணியின் தேர்வுக் குழுவில் ஒருசில உறுப்பினர்களை நீக்குமாறு கோரி முன்னாள் அணித் தலைவர் ஹீத்ஸ்ரீக் முன்வைத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினை காரணமாக சிம்பாப்வே அணியிலிருந்து 12வெள்ளையின வீரர்கள் வெளியேறியமை தெரிந்ததே. (8)




நகர மண்டபத்தின் மேல் மாடியில் விளையாட்டு வீரர்கள் பெற்ற வெற்றிச் சின்னத்தை, வெற்றி ஆரவாரம் செய்யும் மக்கள் கூட்டத்துக்கும் காண்பிக்கிறார்கள்.

# 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் இந்தியாவில் நடைபெறும் !

2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை டெல்லியில் நடாத்துவதற்கு இந்திய ஒலிம்பிக் சங்கம் அனுமதி கோரிவருகிறது.

இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் இது குறிந்துக் கருத்துக் தெரிவிக்கையில்,

"2010ஆம் ஆண்டு கொமன்வெல்த் போட்டிகள் டெல்லியில் நடைபெறவுள்ளன. இதனிடையே சர்வதேச அளவிலான விளையாட டுப் போட்டிகளை அங்கு நடாத்துவ தற்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத் தப்பட்டு விடும். அதன் பின் 2014 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டி மற்றும 2016ம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளையும் நடாத்தும் வாய்ப்பினையும் பெறவுள்ளோம் என்றார்.

இதேவேளை இதற்கு முன்னர் 1951,1982 ஆம் ஆண்டுகளில் ஆசிய விளையாட்டுப் போட்டி டெல்லியில் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.(8)



இலங்கை சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான கடைசி கிரிக்கெற் டெஸ்ட் போட்டி புலவாயோவில் நடந்து வருகின்றது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இரட்டைச்சதத்தைப் பெற்று பூர்த்தி செய்த மாவன் அத்தப்பத்து,துடுப்பு மட்டையை உயர்த்திக்காட்டுகிறார். அத்துடன் இவருக்குத் துணையாக நின்று ஆடிவரும் சங்கக்கார அத்தப்பத்துக்கு வாழ்த்துத் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# ஹொக்கிப் போட்டியில் இந்தியா வென்றது

(புதுடில்லி)

நான்கு நாடுகள் பங்கேற்கும் பட்டோமோனியா ஹொக்கிப் போட்டிகளில் இந்தியா சீனாவை 4:0 என்ற கோல்கணக்கில் வென்றது.

முதலாவது போட்டியில் ஜப்பானை 2:1என்ற கோல்கணக்கில் வென்றபிறகு இது இந்தியாவிற்குக் கிடைத்த இரண்டாவது வெற்றியாகும் .

சீனாவிற்கு எதிரான ஆட்டத்தில் இடைவேளைக்கு முன் 2கோல்களையும் இடைவேளைக்குப் பின்பு 2கோல்களையும் இந்தியா போட்டது.

இறுதி ஆட்டத்தில் கொரியாவுடன் விளையாடும். (து)

## விளையாட்டுச் செய்திகள்

# தென்னாபிரிக்க அணி இலங்கை வருகை

இரண்டு டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கும் பொருட்டு தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி ஜூலை 27 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளது. இலங்கையில் ஆசிய வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இறுதிச்சுற்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் இலங்கை வரவுள்ள தென்னாபிரிக்க அணிமுதலில் டெஸ்ட் போட்டிகளிலும் ஒரு நாள் தொடரிலும் பங்கேற்கவுள்ளது.

ஜூலை 31ஆம் திகதி எஸ்எஸ்.ஸி அரங்கில் இடம்பெறவுள்ள மூன்று நாள் பயிற்சிப் போட்டியும் தென்னாபிரிக்க அணியின் இலங்கைச் சுற்றுலா ஆரம்பமாகவுள்ளது. டெஸ்ட போட்டித் தொடர் ஆகஸ்ட் 4ஆம் திகதி காலியில் ஆரம்பமாகும். ஒரு நாள் தொடர் ஆகஸ்ட் 20ஆம் திகதி தம்புள்ளையில் ஆரம்பமாகும். (61)



மூன்று பஸ்வண்டிகளில் பயணம்செய்த ஆர்செனல் வின்சர் வீரர்கள், கிளப் அலுவலர்கள், வெற்றிபெற்ற மகளிர் அணி ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் காணப்படுகிறார்கள்.

# பங்களாதேஷ் அணியை மேற்கிந்திய அணி வென்றது

சென்ரவுன் சென்பீற்றேஸ் மைதானத்தில் நடந்த இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷ் அணியை 23ஒட்டங்களால் தோற்கடித்தது.

மட்டுப்படுத்தப்பட்ட 25 ஓவர்களைக்கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 7விக்கெற் இழப்புக்கு 122ஓட்டங்களையும் பங்களாதேஷ் வீரர்கள் 8விக்கெற்றை இழந்து 101ஓட்டங்கள் மாத்திரமே எடுத்தனர்.

நேற்று முன்தினம் நடந்த இப போட்டியிலும் மேற்கிந்திய அணியே வெற்றியீட்டியது. (து)



தங்களது விளையாட்டுக் குழுவின் வெற்றியை கொண்டாடும் முகமாக ஹைபெரி வீதிகளில் ஆரவாரமாக குழுமிநின்று மகிழ்ச்சியை தெரிவிக்கும் விளையாட்டு வீசிறிகள்.

# அவுஸ்திரேலிய பிரதமரின் கருத்துக்கு முத்தையா முரளிதரன் பதிலடி

இலங்கைஅணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனின் பந்து வீச்சு முறை சரியானது அல்ல என அவுஸ்திரேலியாவின் பிரதமரான ஜோன் ஹவட் கூறியதையடுத்து இலங்கை அணியின் அவுஸ்திரேலியப் பயணத்தைப் புறக்கணிக்கப் போவதாக முரளிதரன தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட முரளி எனது பந்து வீச்சு முறைபற்றித் தீர்ப்புக் கூறுவதை விட அவுஸ்திரேலியாவை ஆட்சி செயவது பற்றி ஹவாட் கவனம் செலுத்தினால் நன்றாக இருக்கும்.

ஹவாட்டின் இவ்வாறான கூற்றுகளால் எதிர்வரும் ஜூலை மாதம் இலங்கை அணிமேற்கொள்ளவிருக்கும் அவுஸ்திரேலியப் பயணத்திலிருந்து விலகுவதற்கு எண்ணியுள்ளேன்.

ஒரு நாட்டின் பிரதமராக இருந்து கொண்டு ஹவாட் இவ்வாறு கூறியிருப்பது மிகவும் தவறானதாகும் உண்மை என்ன என்பது பற்றித் தெரியாத நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கக் கூடாது.

அவுஸ்திரேலியப் பிரதமரின் இந்தக் கருத்தானது அரசியல் பிரச்சினையாக மாறியிருப்பதால் அவுஸ்தி ரேலியா வுக்கான பயணம் குறித்து இலங்கை அரசுடன் ஆலோசனை நடாத்தவுள்ளேன் எனக் குறிப்பிட்டார்.

டெஸ்ட்கிரிக்கெற் போட்டிகளில் 523 விக்கெற்றுக்களை வீழ்த்தியதன் மூலம் அதிக விக்கெற்றுக்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் முரளிதரன முதல் நிலையில் இருப்பது குறிப் பிடத்தக்கது. (8)

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் - குறள்

# வலம்புரி

## யாழ்.சிற்றூர்திச் சங்கத்தின் அறிக்கை...!

யாழ். குடாநாட்டில் இடம்பெற்றுவரும் வாகன விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. வாகன விபத்துக்களால் யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை விடுதி நிரம்பியுள்ளது. இதேவேளை வாகன விபத்துக்களால் மனித உயிர் இழப்புக்களும் தாராளமாக நடந்த வண்ணம் உள்ளது.

கடந்த ஒருசில நாட்களுக்கு முன்னர் சுழிபுரம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் பாடசாலை மாணவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்தமையும் அதனைத் தொடர்ந்து குறித்த மினிபஸ் சம்பவ இடத்தில் எரித்து நாசமாக்கப் பட்டமையும் நடந்துமுடிந்த நிகழ்வுகள்.

மினிபஸ் எரியூட்டப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். மாவட்ட சிற்றூர்தி சங்கத் தலைவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் பல நெருக்கடியான சூழ்நிலையிலும் யாழ். சிற்றூர்திச் சங்கம் தனது சேவையை மக்களுக்கு வழங்கியிருந்தது எனக் குறிப்பிட்டதோடு, சுழிபுரம் பகுதியில் நடந்த விபத்தின் போது விஷமிகள் மினிபஸ்சை தீயிட்டு கொளுத்திய சம்பவம் யாழ். மாவட்ட சிற்றூர்தி உரிமையாளர்களுக்கு விசனத்தையும், சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வாகன விபத்தொன்றில் ஒரு பாடசாலை மாணவன் உயிரிழந்தமைக்கு எதுவித அனுதாபமும் தெரிவிக்காத அந்த அறிக்கையில் மினிபஸ் எரிக்கப் பட்டதால் வாகன உரிமையாளர்களுக்கு விசனமும், சீற்றமும் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டதிலிருந்து சிற்றூர்திச் சங்கத்தின் பக்கச்சார்பு வெளிப்படையாகி உள்ளது.

நெருக்கடியான சூழ்நிலையிலும் மிகச் சிறப்பாக சேவையாற்றிய சிற்றூர்திச் சங்கத்தை எவரும் பாராட்டத் தவற மாட்டார்கள். ஆனால் இக்கட்டான சூழ்நிலையில் சேவையாற்றியதற்காக பாதசாரிகளை மோதி அவர்களை சாகடிக்கலாமா? என்ற கேள்வி பொதுமக்களிடம் எழுந்துள்ளதை சங்கம் அறிந்து கொள்ள வேண்டும்.

பொலிசார் முன்னிலையில் மினிபஸ் எரிக்கப்பட்டதை கண்டித்த சங்கத் தலைவர் ஒரு முக்கிய விடயத்தை சுட்டிக்காட்ட தவறிவிட்டார். அதாவது பாதசாரிகளை மோதி சாகடித்துவிட்டு பொலிசாருக்கு லஞ்சம் கொடுத்து வாகன சாரதிகள் தப்பித்துக் கொண்டதும், உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் கண்ணீர் வடிப்ப தையும் சங்கத் தலைவர் நினைவு படுத்தாமை எதற்காக?

விபத்துக்களில் இருந்து தப்பித்துக் கொள்வதறகாக வாகன உரிமையாளர்களும், சாரதிகளும் பொலிசா ருக்கு லஞ்சம் கொடுத்து தப்பித்து வெளியேறிய போது, சிற்றூர்திச் சங்கம் அப்படிச் செய்வது தவறு. உயரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு கிடைக்க வேண்டும் எனக் கூறியிருந்தால், இப்போது அவர்கள் குறைகாணும் பொலிசார் பற்றி பொதுமக்களும் விசனம் கொண்டிருப்பர். இதற்கு மேலாக,

ஒடுக்கமான வீதிகள், தெருவை ஆக்கிரமிக்கும் கடைகள், வீதிகளில் தரித்துநிற்கும் வண்டிகள், ஈருளிகளில் சமாந்தரமாகச் செல்லும் பயணிகள், கட்டுப்பாடற்ற வாகனங்களின் அதிகரிப்பு, பாதசாரிகளின் கவனயீனம், போக்குவரத்தை ஒழுங்க மைக்கும் பொலிசாரின் பணிக்குறைவு ஆகியவையே விபத்துக்குக் காரணம் எனப் பட்டியல் போடும் சிற்றூர்திச் சங்கத் தலைவர்,

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களை முந்திச் செல்வதற்காக அதிவேகமாகச் செல்லும் மினிபஸ்களையும், சாரதிகளின் கவன யீனத்தையும் குறிப்பிட மறந்தது ஏன்?

ஆக, தத்தம் பாதிப்பை மட்டுமன்றி மக்களின் நலனையும் கவனிப்பதே சங்கங்களின் கடமையாக இருத்தல் வேண்டும். சுழிபுரத்தில் மினிபஸ் எரிக்கப்பட்டதை நியாயப்படுத்த எவ்வகையிலும் முடியாது. ஆனால் மினிபஸ் சாரதிகள் கவனயீனமாக நடந்தால் அதற்காக பொதுமக்கள் தண்டனை வழங்குவதையும் எவராலும் தடுக்க முடியாது போகும்.

# பலப் பரீட்சைக் களமாக இன்று பாராளுமன்றம் மாறும் வாய்ப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் இன்று கூடும்போது நாடாளுமன்றத்தில் பிரதிச் சபாநாயகர், சபை முதல்வர் பதவிகளுக்கான போட்டிகள் இடம்பெறவுள்ளதால் பிரதான கட்சிகளிடையேயான பலப் பரீட்சைக் களமாக இன்றைய தினம் பாராளுமன்றாம் மாறக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பதவிகளுக்கான தமது வேட்பாளர்கள் யார் என்பதை இதுவரையில் அறிவிக்காத ஐக்கிய தேசிய முன்னணி இன்று இடம்பெறும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தை அடுத்தே தமது கட்சி வேட்பாளர்கள் யார் என்பதை அறிவிகக்கும் எனத் தெரியவந்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த முத்து சிவலிங்கத்தை பிரதிச் சபாநாயகர் வேட்பாளராகவும், முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த எம்.ரி.ஹசன் அலியை சபை முதல்வர் வேட்பாளராகவும் நிறுத்துவது என்று ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானித்ததாகத் தகவல்கள் வெளியாகியிருந்த போதிலும், தற்போது இம்முடிவுகளிலும் மாற்றங்கள் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ள நிலையில், சபாநாயகர் தெரிவின் போது இருந்தது போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு தமகது கிடைக்குமா என்ற சந்தேகமும் இவர்களிடம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும் தமது தரப்பு வேட்பாளர்களின் விபரங்களை இன்று வெளியிடலாம் என்று எதிர்பார்ககப்படுகின்றது.

(உ)

## யாழ். மாவட்டத்தில்

# 1827 கிராமமட்ட அமைப்புக்கள் இருந்தும் எதுவித பயனுமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சனசமூக நிலையங்கள், இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விவசாயிகள் சங்கங்கள் என சுமார் ஆயிரத்து 827 கிராமிய மட்ட அமைப்புக்கள் இருக்கின்ற போதிலும், கிராமிய மட்ட புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப்பணிகள் முன்னெடுத்துச் செல்லப் படவில்லை எனத் தெரியவருகின்றது.

இதன் காரணமாக கிராமிய மட்ட அமைப்புகள் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒட்டு மொத்தமான புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களில் எத்தகைய பங்களிப்புகளும் செய்யாமலே இருக்கின்றன. இதன் பொருட்டு மாவட்டத்திலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் வாழ்கின்ற ஏழை, எளியவர்கள் மற்றும் கல்வியறிவு அற்ற குடும்பங்களுக்கான சரியான வழிகாட்டல்களும் வழிநடத்தல்களும் இல்லாத நிலையே காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகத் திரட்டப்பட்ட தகவல்கள் மற்றும் புள்ளி விபரங்களின பிரகாரம் இம் மாவட்டத்தில் 798 சனசமூக நிலையங்களும் 128 இளைஞர் கழகங்களும், 209 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 111 மாதர் அபிவிருத்திச சங்கங்களும, 321 விளையாட்டுக் கழகங்களும், 260 விவசாயிகள் சங்கங்களும் இருக்கின்றன. எனத் தெரியவருகின்றன.

ஆயினும் இவற்றில் எத்தனை சதவீதமானவை அந்தந்தக் கிராமங்களில் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. கிராமிய மட்டத்தில் இருக்கின்றவர்கள் மத்தியில் சேவை மனப்பான்மையையும் தலைமைத்துவத்தையும் வளர்த்து கிராமங்களை விழிப்புணர்வடையச் செய்து தற்காப்பு நிலைகளை ஒவ்வொருதுறையிலும் ஏற்படுத்தவேண்டும் எனக் கூறப்படுகின்றபோதிலும் கூட இவை அவற்றின் இலக்கினை அடையவில்லை எனச் சொல்லப்படுகின்றது.

இதேசமயம் , கிராமிய மட்ட அமைப்புக்கள் மத்தியில் முரண்பாடுகள, ஒத்துழையாமை போன்றவை உருவெடுத்து கிராமிய மட்ட அமைப்புக்களின் நிர்வாகங்களின் ஆதிக்க நிலைகளைத் தோற்றுவித்துள்ளன.

இதனால், பெரும்பாலான கிராமிய மட்ட அமைப்புக்கள் அரசாங்க அதிகாரிகளைத் திருப்திப்படுத்திவிட்டாலே போதும் என்ற நோக்கில் இருந்து வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட கிராமிய மட்ட அமைப்புக்களை நல்லபடியாகவே மக்கள் நலன் சார்ந்து உண்மையாகவும் நீதியாகவும் இயங்கச்செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாக இன்று கருதப்படுகின்றது.

இதனகாரணமாகவே கிராமங்களில் பொருளாதார, கல்வி, விவசாய, சுகாதாரம் மற்றும் தொழில் சார் செயற்பாடுகள் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இதுவரையும் இடம்பெறவில்லை என தெரியவருகிறது. (4,16)

# பொம்மை வெளியில் புற்றுநோய் காப்பகம்

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்தில் மருத்துவர்களாகப் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களின் நிதியுதவியுடன், யாழ்ப்பாணம் பொம்மை வெளிப்பகுதியிலுள்ள 25பரப்பு நிலத்தில் புற்றுநோய்க் காப்பகம் ஒன்று விரைவில் அமைக்கப் படவுள்ளது என யாழ்ப்பாணப பல்கலைக்கழகத்தின் முன் னாள் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.பாலசுப்பிரமணி யம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பேராசிரியர் மேலும் தெரிவிக்கையில்,

இப்புற்றுநோய் காப்பகத்தினை அமைப்பதற்கென இரு சகோதரிகள் பொம்மை வெளியில் 25 பரப்புக் காணியை அன்பளிப்புச் செய்துள்ளனர். அதேசமயம், இங்கிலாந்தில் மருத்துவர்களாகப் பணிபுரியும் யாழ்ப்பாணத்தவர்கள் 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இக்காப்பகத்தினை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது. இதேவேளை இக் காப்பகம் செயல்பட ஆரம்பித்ததும் புற்றுநோயினால் பாதிக்கப்படும் வடக்கு -கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் பயன் அடைவார்கள் எனத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன் றினை ஆரம்பிக்கும் படி பல கோரிக்கைகள் முன்னைய அரசி டம் முன் வைகைப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (தி-16)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

துயில் கொள்ளச் செல்லுமுன் அன்று நாம் செய்த நற்செயல்கள், தீய செயல்கள் இவை பற்றிச் சிந்தித்து அவற்றைச் சரி செய்து உறுதி எடுத்துக்கொள்ளல் வேண்டும். தினமும் நாட் குறிப்பு எழுத வேண்டும்.

சுவாமி வீவேகானந்தர்

# சட்டவிரோத ஆட்கடத்துநர்களின் பெயர் விபரங்களைத் தரவேண்டும்

## அரச சட்டத்தரணி கோரிக்கை

(கொழும்பு)

இத்தாலிக்கு சட்டவிரோதமாக ஆட்களைக் கடத்துபவர்களின் பெயர் விபரங்களைத் தெரிவித்தால் மாத்திரமே சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயற்சி மேற்கொண்டு தற போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என சிரேஷ்ட அரசாங்க சட்டத்தரணி சி.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இத்தாலிக்கு சட்டவீரோதமான ஆட்களை கடத்துபவர்களின் விபரங்களை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் சரியாகக் கூறுவார்களாயின் அவர்களை விடுதலை செய்ய உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.(60, 10)

## கடந்த 5 வருடத்தில்

# 4,48,674 வெடிபொருள்கள் குடாநாட்டில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த 5வருடத்தில் 4 இலட்சத்து 48ஆயிரத்து 674 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன என யாழ்ப்பாணம் அரச செயலகத்தில் இயங்கிவரும் மிதிவெடிகள் அகற்றும் இணைப்புச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த 1999ஆம ஆண்டில் இருந்து இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவு, அமெரிக்காவைச் சேர்ந்த றொன்கோ நிறுவனம், ஹலோ டிரஸ்ட் நிறுவனம் மற்றும் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த மிதிவெடி அகற்றும் நிறுவனம் ஆகியன மிதிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் தீவகத்தில் 199 வெடிபொருட்களும், யாழ்ப்பாணத்தில் 8ஆயிரத்து 174, நல்லூரில் 7ஆயிரத்து 931, தென்மராட்சியில் 30ஆயிரத்து 248,வடமராட்சி கிழக்கில் 3இலடசத்து 50ஆயிரத்து 768, வடமராட்சி வடக்கில் 10ஆயிரத்து 259, வலிகாமம் தெற்கில் 365, வலிகாமம் தென் மேற்கில் 466வெடிபொருட்களும் கடந்த 5வருடத்தில் அகற்றப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த 20வருட காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்களால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்களைப் பூரணமாக அகற்றுவதற்கு இன்னமும் 3வருடங்கள் செல்லும் எனவும் கெரியவருகின்றகு. (கி-16)

# டெஸ்ட் தொடரை இலங்கை அணி வென்றது

(புலவாயோ)

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் புலவாயோவில் நடைபெற்ற இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 254 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

இலங்கை அணியைவிட 485 ஓட்டங்கள் குறைவாகப் பெற்றிருந்த சிம்பாப்வே அணி தனது இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கற்றுக்களையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. சிம்பாப்வே அணி சார்பில் துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான பிறைன்ரன் ரெய்லர் 61 ஓட்டங்களையும் ரோன் எப்ராகிம் 42 ஓட்டங்களையும், பன்னயங்கார ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கையணி சார்பில் முத்தையா முரளிதரன் 4 விக்கெற்றுக்களையும், சமிந்த வாஸ், நுவன் சொய்ஸா, சனத் ஜெயசூரிய ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

சிம்பாப்வே அணி தனது முதல் இனிங்ஸில் 228 ஓட்டங்களையும், இலங்கை அணி தனது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெற் இழப்பிற்கு 713 ஓட்டங்ளையும் பெற்றிருந்தன. இலங்கை அணி சார்பில் குமார் சங்ககார 270 ஓட்டங்களையும், அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து 249 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த்தன ஆட்டமிழகாமல் 100 ஓட்டங்ளையும் பெற்றனர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக குமார் சங்ககாரவும், போட்டித் தொடர் நாயகனாக மாவன் அத்தப்பத்துவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இரண்டு போட்டிகள் கொண்ட இத் தொடரில் 2:0 என்ற கணக்கில் இலங்கை அணி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-121)

## புலிகள்..

மென்றும் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தையை கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வெற்றிகரமாக செயற்படுத்தியது. ஆனால் மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கின்ற ஜனாதிபதியின் அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்குமா என்பது சந்தேகமே என்றும் அவர் கூறினார். ராஜீவ காந்தி கொலை விவகாரத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நளினிக்கு சோனியா காந்தி மன்னிப்பளித்த நிலையில், இலங்கையுடனான உறவுகளை அவர் தொடர்வார் என்று தாம் நம்புவதாக சந்திர சேகரன் கூறியுள்ளார் (ச)

## அநுரா...

மத்திய குழுக் கூட்டத்தில் வைத்து ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்றார். இதேவேளை இதுபற்றிய விளக்கத்தை ஜனாதிபதி தனனிடம் கோரியதை அநுரா மறுப்புத் தெரிவிததார். நான் நேற்று முழுவதும் ஜனாதிபதியுடனேயே இருந்தேன. இதுபற்றி ஒரு விடயமும் அவர் என்னிடம் கதைக்கவில்லை என்றார். (ந-6)

# நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாளையும், நாளை மறுதினமும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவிருக்கிறது.

நாளை காலை 9 மணிமுதல் 12 மணிவரை நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்திலும், பி.ப. 2மணி முதல் பி.ப. 3 மணிவரை கொக்குவில் கிழக்கு காளிகோவிலடியிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளை மறுதினம் காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும், காலை 10.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை ஆறுகால்மடம் பாரதி சனசமூக நிலையத்திலும், பி.ப. 2 மணிமுதல் 3 மணிவரை பழைய தபாற்கந்தோர் வீதியிலுள்ள கொக்குவில் கிழக்கு சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது. (த)

## அகாஷி..

தான் விரும்புவதாக அகாஷி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி மற்றும் பிரதமரையுசூசி அகாஷி சந்திப்பதற்கு ஏற்பாடாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# மேஜர் இளஞ்செழியனின் நினைவுக்கல் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

கடநத 14-10-1999 அன்று ஆனைப் பந்தியில் இடம்பெற்ற இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது தனக்குத் தானே குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவடைந்த மேஜர் இளஞ்செழியன்(கனகசபை நற்சபேசன் ஆவரங்கால் புத்தூர்) திருவுருவப் படம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுத் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

பிற்பகல் 3மணியளவில் நடைபெறற இந் நிகழ்வில் ஈகச் சுடரினை மாவீரரின் சகோதரன் ஏற்றினார்.

அரசியல்துறை உறுப்பினர் ஜெகன் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. வீர வணக்க உரைகளை யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி, நிர்வாகப் பொறுப்பாளர் சி.வி.தமிழ்மாறன் ஆகியோர் நிகழ்த்தினர்.

பிற்பகல் 4.15 மணியளவில் மாவீரரின் சகோதரர்களால் நினைவுக் கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (த)

## கூட்டமைப்பு.....

புப்பட்டி அணிந்து நாடாளுமன்றத்திற்கு பிரசன்னமாவது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருக்கிறது. அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கின்ற கந்தப்பொல சம்பவம் தொடர்பான ஒத்தி வைப்பு வேளை விவாத்தின் போதே மூன்று மணிநேரம் கறுப்புப்பட்டி அணிய விருப்பதாக கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதன் தவறுகளை திருத்திக் கொண்டால் பிரதி சபாநாயகர் தெரிவின் போது அந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பல தடவைகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அறிவுறுத்தியிருப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் அரசியல் அதியுயர் பீடத் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பௌத்த மத குருமாருக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென்பது, முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளில் முக்கியமானதாகும். இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் பிரதி சபாநாயகர் தெரிவின் போது கூட்டமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட மாட்டாதென்று மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு கட்சி சார்பில் எவரையும் முன்மொழிவதில்லையென்றும் ஜாதிக ஹெல உறுமய தீர்மானித் துளளதாக அவர் மேலும் கூறினார். (ச)

## தத்தம்......

யின் உதவிநாடியிருக்கும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்றைய தெரிவில் அரசை ஆதரிக்காது போனாலும் நடுநிலைமை கொள்கையை அனுசரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம், அவர்கள் இன்று காலை பாராளுமன்றக் கட்டடத்தில் கூடி முடிவெடுக்கவுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க, அரசின் வேட்பாளரைத் தோற்கடித்து இரண்டாவது தடவையாக சந்திரிகாவின் அரசு சிறுபான்மை என்பதை நிரூபிப்பதற்காக எதிர் அணிக் கட்சிகளைத் தம்பக்கம் இழுப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த முத்து சிவலிங்கத்தை பிரதி சபாநாயகர் தெரிவுக்கு வேட்பாளராக நியமிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கா முனைப்புடன் செயற்பட்டு வரும் நிலையில், ஆறுமும் தொண்டமான் இது குறித்து இன்று காலை தீர்மானிக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சமாதான முயற்சிகளை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்க மாட்டாதென முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருப்பது ரணில் விக்கிரமசிங்காமீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வைத்திருக்கும் நம்பிக்கையை சிதறடித்திருப்பதினால், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் தலைவர் தெரிவில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் ஆதரிக்க மாட்டார்களென்றும் கொழுமபு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது.(ம)

# தேசிய மட்டத்தில் 3ம் இடம்

(கொழும்பு)

கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் மூன்று நாட்கள் இடம் பெறும் இளையவர்களுக்கான நாடு தழுவிய தேசிய விளையாட்டுப் போட்டியல், கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி சீவரத்தினம் தாரணி 16 வயதிற்குட்பட்ட குண்டெறிதல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று பதக்கத்தை வென்றுள்ளார். (ச)

## தமிழ் மக்களின்...

இந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்களை மீண்டும் தமது சொந்த இடமாகிய வடமராட்சிக் கிழக்குப்பகுதியில் மீளக் குடியமர்த்துவதற்கு முயற்சித்த போதும் இரண்டு பலமான பிரச்சினைகளாக மருத்துவம், கல்வி ஆகிய பிரச்சினைகள் எழுந்தன.

இந்த இரண்டு முக்கியமான பிரச்சினைகளையும் எமது இரண்டு துறையினரும் பொறுப்பேற்று மிகவும் சிறப்பாக மேற்கொண்டமையால் இந்தப்பகுதி மக்கள் படிப்படியாக தமது சொநத இடததில் மீளக் குடியமரக் கூடியதாக இருந்தது.

எமது தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் வாழும் எமது மக்கள் விடுதலைப் போராட்டத்திற்கு பெரும பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அந்தவகையில் வடமராட்சி கிழக்கில் அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் மருத்துவ சேவை கட்டட அமைப்புப் பணிகளுக்குப் பெருமளவான நிதியை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

மக்களின் சேவையை கருத்தில் கொணடு இந்த மருத்துவமனையை விரைவாக அமைத்துத்தந்தமைக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருக்கு கடற்புலிகளின் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த இரண்டு ஆண்டு கால சமாதான சூழலில் போரினால் பெரும் சிதைவுகள் ஏற்பட்ட பகுதிகள் எவற்றிலும் எவ்வித அபிவிருத்தியும் நடைபெறவில்லை. அபிவிருத்தி செய்கிறோம் என்று கூறுகின்றார்கள். ஆனால் எதுவும் நடைபெறவில்லை. எனவே இந்த மருத்துவமனையைக் கட்டுவதற்கு புலம் பெயர்ந்து நோர்வேயில் வாழ்கின்ற மக்கள் எவ்வாறு உதவி புரிந்தனரோ அதுபோல் ஏனைய நாடுகளில் வாழுகின்ற மக்களும் தமது உதவிகளை மேற்கொண்டு போரினால் சிதைவடைந்த பகுதிகளைக் கட்டியெழுப்ப அதிக ஈடுபாடு காட்ட வேண்டும். கடந்த சில ஆண்டுகளின் முன்னர் சிங்களப் படைகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து வெளிநாட்டு இராணுவ ஆலோசனைகளைப் பெற்று பெரும் போரை எமக்கு எதிராக திணித்தன.

இதன்மூலம் எமது மண்ணின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சிங்கள அரசுகளின் இந்த போர் முயற்சிகளை மிகவும் இலகுவாக எதிர்கொண்ட எமது தலைவர் அவற்றை மிகவும் சுலபமாக முறியடித்து இராணுவ ரீதியாக பெரும் சாதனையை நிலைநாட்டினார். இப்போது அரசியல் ரீதியாக எமது நிலைப்பாட்டை உலகுக்கு உறுதியாக எடுத்துக் கூறி அரசியல் பலத்தையும் தெளிவாக நிலைநாட்டி வருகிறார். இதனை வைத்துப் பார்க்கும் போது எமது தலைவரின் தீர்க்க தரிசனத்தையும் அவரது தெளிவான பார்வையையும் புரிந்து கொள்ள முடிகிறது எனத் தெரிவித்தார். (த)




இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.